بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

**Weekly BADAR Qadian Tamil**

தொகுதி 8

இதழ் 41

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரி கமரி 1445 - ரபீயுல் அவ்வல்- 26 ★ ஹிஜ்ரி ஷம்ஸி 1402 - அகாஃ 26 ★ 12 அக்டோபர் 2023


## அல்லாஹ்வின் கட்டளை

وَبِالۡحَقِّ اَنۡزَلۡنٰہُ وَبِالۡحَقِّ نَزَلَ ؕ
وَمَاۤ اَرۡسَلۡنٰکَ اِلَّا مُبَشِّرًا وَّنَذِیۡرًا ﴿۱۰۶﴾

**பொருள்**

நாம் இ(ந்தக்குர்ஆ)னை உண்மையை(யும் நுட்பமான ஞானத்தையும்) கொண்டே இறக்கினோம். உண்மையை(யும் நுட்பமான ஞானத்தையும்) கொண்டே இது இறங்கியுள்ளது. நாம் உம்மை நற்செய்தி வழங்குபவராகவும் (தண்டனையைப் பற்றி) எச்சரிப்பவராகவுமே அனுப்பியுள்ளோம்
(பனீ இஸ்ராயீல்: 106)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**உயர் நல்லொழுக்கங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள். ஏனெனில் நன்மைகளின் திறவுகோல் நல்லொழுக்கமே ஆகும். அனைத்து கண்ணியங்களைக் காட்டிலும் இறைத் தூதர் (ஸல்) அவர்களுடைய கண்ணியம் மிகைத்தது ஆகும். முழு இஸ்லாமிய உலகிலும் அதன் தாக்கம் உள்ளது**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

### ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயரிய மேன்மைகள்

அனைத்து கண்ணியங்களைக் காட்டிலும் இறைத் தூதர் (ஸல்) அவர்களுடைய கண்ணியம் மிகைத்தது ஆகும். முழு இஸ்லாமிய உலகிலும் அதன் தாக்கம் உள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தன்மானமே மீண்டும் உலகை உயிர்பித்தது. அரேபியாவில் விபச்சாரம், மது மற்றும் போர்புரிதல் ஆகியவற்றை தவிர வேறெதுவுமே இல்லாமல் இருந்தது. மேலும், அடியார்களுக்கான உரிமைகள் முற்றிலும் பறிக்கப்பட்டிருந்தது. அனுதாபம் மற்றும் மனித குலத்திற்கு நன்மையை நாடுதல் என்பதற்கான பெயரும் அடையாளமும் கூட அழிந்திருந்தது. அடியார்களுக்கான உரிமைகள் மட்டும் அழிந்திருக்கவில்லை. மாறாக, அல்லாஹ்விற்கு செலுத்தப்பட வேண்டிய உரிமைகளின் மீது இன்னும் கூடுதல் இருள் சூழ்ந்திருந்தது. கற்களுக்கும், எலும்புகளுக்கும், நட்சத்திரங்களுக்கும் அல்லாஹ்வின் பண்புகள் (அந்த மக்களால்) கொடுக்கப்பட்டிருந்தன. வகை வகையான இணை வைத்தல் பரவியிருந்தது. பலவீனமான மனிதன் மற்றும் மனிதனின் மர்ம உறுப்பு வரையிலும் உலகில் வணங்கப்பட்டுக் கொண்டிருந்தன. இதுபோன்ற அறுவறுக்கத்தக்க வரைபடம் சிறிது நேரத்திற்காக ஒரு தூய இயல்பு படைத்த மனிதனுக்கு முன்னால் வந்துவிட்டால் பின்னர் ஓர் அபாயகரமான இருள் மற்றும் அநீதி அக்கிரமங்களின் கொடூரமான மற்றும் அபாயகரமான காட்சியை அவர் காண்பார். பக்கவாதம் என்பது ஒரு பக்கம் ஏற்படுகின்றது. ஆனால், இது எப்படிப்பட்ட பக்கவாதம் என்றால் இரண்டு பக்கமும் செயலழிக்கச் செய்துவிடுகின்றது. முழுமையான குழப்பம் உலகில் ஏற்பட்டு இருந்தது. கடலிலும் அமைதியும் பாதுகாப்பும் இருக்கவில்லை. நிலத்திலும் அமைதியும் நிம்மதியும் இருக்கவில்லை. தற்போது இந்த இருள் மற்றும் அழிவில் காலத்தில் நாம் இறைத் தூதர் (ஸல்) அவர்களைப் பார்க்கின்றோம். அன்னார் (ஸல்) தோன்றி இந்தத் தராசின் இரண்டு பக்கத்தையும் எப்படி முழுமையான முறையில் சீர் செய்து விட்டார்கள்

இதன் தொடர்ச்சி : 10ம் பக்கம்...

**ஐரோப்பிய சமுதாயங்களுக்கு எதிராக முஸ்லிம்கள் மீண்டும் மீண்டும் ஜிஹாதிற்கான அறிவிப்புகளை செய்து இஸ்லாத்தின் மதிப்பச்சத்தை அழித்து விட்டனர். எந்த நலம் விரும்பிகள் எல்லாம் அவர்களை இந்த விஷயங்களிலிருந்து தடுத்தார்களோ அவர்களை இஸ்லாத்தின் எதிரியாக ஆக்கிவிட்டனர்**

وَلَا تَقُوۡلَنَّ لِشَایۡءٍ اِنِّیۡ فَاعِلٌ ذٰلِکَ
غَدًا ﴿ۙ۲۴﴾ اِلَّاۤ اَنۡ یَّشَآءَ اللّٰہُ ۫ وَاذۡکُرۡ رَّبَّکَ اِذَا
نَسِیۡتَ وَقُلۡ عَسٰۤی اَنۡ یَّہۡدِیَنِ رَبِّیۡ
لِاَقۡرَبَ مِنۡ ہٰذَا رَشَدًا ﴿۲۵﴾

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் சூரா அல்கஹ்ஃப் மற்றும் குகைவாசிகளைக் குறித்து விளக்கவுரை வழங்கியவாறு கூறுகின்றார்கள்:

இந்த வசனத்தில் மீண்டும் அந்த சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கான காலத்தைக் குறித்து ஒரு செய்தி வழங்கப்பட்டுள்ளது. அது இதுவாகும். அதாவது, அந்த சமுதாயத்திற்கு எதிராக வாதம் செய்யாமல் இருப்பது, மேலும், அல்லாஹ் அவர்களைக் குறித்து ஏதாவது செய்தி வழங்காத வரை அதாவது அவர்களுடன் இனி இவ்வாறு நடந்து கொள்ளப்பட உள்ளது என்று இல்ஹாமின் மூலமாக கூறாத வரை நாங்கள் நாளை அவர்களை அழித்து விடுவோம் என்று கூறாமல் இருப்பது ஆகும்.

சில மக்கள் இந்த வசனத்திற்கு இவ்வாறு பொருள் செய்துள்ளனர். அதாவது, முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களே! இன்ஷா அல்லாஹ் என்று கூறாமல் எந்த விஷயத்தையும் கூறாதீர்கள். மேலும், இந்தக் கட்டளையைக் குறித்து சில மிகவும் பரிதாபத்திற்குரிய அறிவிப்புகளையும் பதிவு செய்துள்ளனர். அவற்றில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது மிகத் தெளிவாக அவமரியாதை செய்யப்பட்டுள்ளது. ஆனால், வசனத்தின் சொற்கள் இங்கு இன்ஷா அல்லாஹ் என்று கூறுவது தொடர்பான குறிப்பு இல்லை என்பது கூறுகின்றன.

ஒருவேளை அந்தக் கருத்து இருந்திருந்தால்

இதன் தொடர்ச்சி : 12ம் பக்கம்.....

## நபிமொழி

### வலது பக்கத்திற்கு முன்னுரிமை வழங்குங்கள்

(2451) ஹஸ்ரத் ஸஹல் பின் ஸஅத் ஸாஇதீ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு பருகுவதற்கு ஒரு பானம் வழங்கப்பட்டது. அன்னார் (ஸல்) அதனைப் பருகினார்கள். மேலும், அன்னாரின் வலது பக்கத்தில் ஒரு சிறுவனும், இடது பக்கத்தில் வயதான நபர்களும் அமர்ந்திருந்தார்கள். அப்போது நான் இதனை இவர்களுக்கு கொடுப்பதற்கு நீ அனுமதி கொடுக்கின்றாயா? என்று அந்த சிறுவனிடம் அன்னார் (ஸல்) கேட்டார்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக! இல்லை என்று அந்த சிறுவன் கூறினான். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தங்களிடமிருந்து என்னப் பங்கு எனக்கு கிடைத்துள்ளதோ அதனை நான் என்னை விட்டு விட்டு வேறு ஒருவருக்கு கொடுக்க மாட்டேன்.

இறைத் தூதர் (ஸல்) அவர்கள் அந்த சிறுவனின் கையில் அந்த பாத்திரத்தை வைத்து விட்டதாக அறிவிப்பாளர் கூறினார்கள்.

### ஒருவருடைய நிலத்திலிருந்து சில பகுதியை ஆகுமற்ற முறையில் எடுத்துக் கொண்ட நபரின் பாவம்

(2452) ஹஸ்ரத் ஸயீத் பின் ஸைது (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் இறைத் தூதர் (ஸல்) அவர்களிடமிருந்து இதனை செவியுற்றேன்: அன்னார் (ஸல்) கூறினார்கள்: எந்த நபர் ஒருவருடைய நிலத்தின் சில பகுதியை ஆகுமற்ற முறையில் எடுத்துக் கொண்டாரோ அது (மறுமையில்) ஏழு நிலங்களாக மாறி அவரது கழுத்தில் (சங்கிலி) விலங்காக இருக்கும்.

(ஸஹீஹ் புகாரி, தொகுதி 4, கிதாபுல் மஸாழிம், காதியான் பதிப்பு 2008-ம் ஆண்டு)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா ஜமாஅத் ஜெர்மனிக்கு ஜல்ஸா ஸாலானா அடிப்படையில் சில அறிவுரைகள் &**

**ஜல்ஸாவில் கலந்து கொண்ட சில விருந்தினர்களின் தாக்கங்கள் மற்றும் மீடியா கவரேஜ் பற்றிய குறிப்புகள்**

**அஹ்மதிய்யா ஜமாஅத் ஜெர்மனியின் ஆண்டு மாநாடு கடந்த வாரம் வெற்றிகரமாக நடைபெற்றது. எனவே எல்லாவற்றிற்கும் முதலாக நாம் அல்லாஹ்வுக்கு அவன் நமக்கு ஓர் இடைவெளிக்குப் பிறகு விசாலமான முறையில் இயல்பு நிலைக்கு ஏற்ப ஜல்ஸா நடத்துவதற்கு நல்வாய்ப்பு வழங்கியதற்காக நன்றி செலுத்த வேண்டும்.**

**ஒவ்வொரு காதிம், ஒவ்வொரு நாஸிர் மற்றும் லஜ்னாவின் ஒவ்வோர் உறுப்பினருக்கும் நான் நன்றி செலுத்துகிறேன். அவர்கள் தம் தரப்பிலிருந்து மிகவும் கடினமாக உழைத்தார்கள். ஆனால், அதிகாரிகள் தமது சீர்திருத்தம் பக்கம் கவனம் செலுத்த வேண்டும்.**

**எல்லாவற்றையும் விட அதிகம் பைஅத் நிகழ்ச்சி என் மீது ஆன்மிக மற்றும் உணர்வு ரீதியான தாக்கத்தை ஏற்படுத்தியது.முதல் நொடிப் பொழுதில் இருந்து நாங்கள் அனைவரும் ஒருவர் மற்றவரின் தோள்களில் கைகளை வைத்துவிட்டோம். எனக்கு ஒரு சொல் கூட புரியவில்லை. ஆனால், என்ன கூறப்பட்டதோ அது ஏதோ ஒரு வகையில் எனது உடல் மற்றும் மூளை வழியாக சென்றது. ஒரு நடுக்கம் ஏற்பட்டு விட்டது. அது என்னை ஆன்மிக ரீதியாக அல்லாஹ்வுக்கு அருகில் கொண்டு சென்றுவிட்டது. பைஅத்தின் காரணமாக எனக்கு கண்ணீர் வந்துவிட்டது**

**- செர்பியாவிலிருந்து கலந்து கொண்ட ஒரு விருந்தினர்**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 08 செப்டம்பர் 2023** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1402 ஆண்டு **தபூக்** மாதம் **08ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

அல்லாஹ்வின் மாபெரும் அருளாலும், கருணையாலும் அஹ்மதிய்யா ஜமாஅத் ஜெர்மனியின் ஆண்டு மாநாடு கடந்த வாரம் வெற்றிகரமாக நடைபெற்றது. எனவே எல்லாவற்றிற்கும் முதலாக நாம் அல்லாஹ்வுக்கு அவன் நமக்கு ஓர் இடைவெளிக்குப் பிறகு விசாலமான முறையில் இயல்பு நிலைக்கு ஏற்ப ஜல்ஸா நடத்துவதற்கு நல்வாய்ப்பு வழங்கியதற்காக நன்றி செலுத்த வேண்டும். இதற்காக முழு நிர்வாகமும் கலந்து கொண்டவர்கள் அனைவரும் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த வேண்டும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தினர்களுக்குத் தொண்டாற்றுவதற்கான நற்பேறை அல்லாஹ் தங்களுக்கு வழங்கியதற்காக பணியாளர்கள் நன்றி செலுத்த வேண்டும். அவ்வாறே, கலந்து கொண்டவர்களும் இந்தப் பணியாளர்களுக்கு அவர்கள் ஜல்ஸாவின் நாட்களில் இவர்களுக்குத் தொண்டாற்ற முயற்சி செய்ததற்காக நன்றி செலுத்த வேண்டும்.

இந்த விசாலமான ஏற்பாட்டிலும் புதிய இடத்திலும் பல குறைகள் எஞ்சியிருந்திருக்கலாம்; இருந்தன என்றே சொல்ல வேண்டும். சில விஷயங்களில் சில விருந்தினர்களுக்கு சிரமும் மேற்கொள்ள வேண்டி வந்திருக்கலாம். சில விஷயங்கள் எனக்கும் தெரிய வந்துள்ளன. சிரமங்கள் ஏற்பட்டனதான்; ஆனால், மார்க்க நோக்கத்திற்காக வந்திருந்தார்கள். எனவே, பொதுவாக விருந்தினர்கள் எந்த முறையீடும் செய்யவில்லை. ஆனால், நான் விசாரித்து அறிந்ததில் சில ஏற்பாடுகள் சரியாக இருக்கவில்லை என்பது எனக்குத் தெரிய வந்தது. சிலவற்றை நானே உணர்ந்தேன். பணியாளர்களைப் பொருத்த வரை அவர்களோ பொதுவாக மிகவும் கடினமாக உழைத்து தம்முடைய கடமைகளை நிறைவேற்றினார்கள். உதவியாளர்கள் ஆகட்டும்; அல்லது இதரப் பணியாளர்கள் ஆகட்டும். எங்கு அவர்கள் தரப்பிலிருந்து ஏதாவது பலவீனங்கள் வெளிப்பட்டனவோ அல்லது எந்தத் துறையில் ஏதாவது பலவீனம் வெளிப்பட்டதோ அவை பொதுவாக அவர்களின் அதிகாரிகளின் தவறான வழிகாட்டல் காரணமாக வெளிப்பட்டன.

எனவே எங்கெல்லாம் விருந்தினர்களுக்குக் கஷ்டம் ஏற்பட்டதோ அங்கு ஜல்ஸா நிர்வாகத்தின் அதிகாரிகளும் பொறுப்பாளர்கள் ஆவார்கள். அமீர் ஸாஹிப் இந்த விஷயத்தைக் குறிப்பாகக் குறித்துக் கொள்ள வேண்டும்; பார்க்க வேண்டும். ஏனெனில், இது அவர்களின் பொறுப்பு ஆகும். அவர்கள் இஸ்திஃக்ஃபார் செய்ய வேண்டும். இனி வரும் காலத்திற்காகத் தம்முடைய குறைகளைத் தமது RED BOOK -ல் எழுதி வைத்து சீர்திருத்தத்திற்கு முயற்சி செய்ய வேண்டும். இந்த இடத்தில் இனி அவர்கள் சிறந்த ஏற்பாட்டை செய்யவும் முடியுமா? இல்லை வேறு எங்கேயாவது ஏற்பாடு செய்யலாமா? என்பதையும் பார்க்க வேண்டும்.

பொதுவாக சில சிரமங்களை சிலவேளை எதிர் கொள்ள நேரிட்டது.அவை இவையாகும். ஒருவர் எனக்கு எழுதினார்: Escalator பழுதடைந்திருந்தது; மேலும், கீழும் செல்வதில் சிரமம் ஏற்பட்டது. லிஃப்ட் வேலை செய்யவில்லை. அதனால் சிரமம் ஏற்பட்டது. தங்குவதற்கு இடம் கொடுத்து விட்டார்கள். ஆனால், குளியலறைகளின் பற்றாக்குறை நிறைய இருந்தது அல்லது தண்ணீருக்கான ஏற்பாடு சரியாக செய்யப்படவில்லை. Karlsruhe வில் அவர்கள் இடம் எடுத்தபோது, அங்கு ஆரம்பத்தில் இவர்கள் என்னை அழைத்துச் சென்றார்கள். நான் அங்கு இதைப் பார்த்தேன். அங்கு குளியலறைகள் மற்றும் தண்ணீருக்கான ஏற்பாடும் சரியாக இருக்க வேண்டும் என்று நான் அவர்களுக்கு கவனமூட்டியிருந்தேன். இதேபோன்று அங்கு பல இடங்களில் நான் நின்று ஒலி கேட்கிறதா? என்று சரிப்பார்த்தேன். அந்த ஹால்கள் சிறியவையாகவும் இருந்தன. ஆனால், அப்படியிருந்தும் அங்கு குறை தென்பட்டது. அதைத் தீர்க்க முயற்சி செய்யப்பட்டது. ஓரளவு சரி செய்யவும்பட்டு விட்டது. ஆனால், இங்கு இந்த விஷயம் சரியாக பார்க்கப்படவில்லை.

எனக்கு இம்முறை இந்த இடத்தின் விவரத்தையோ இவர்கள் கூறவில்லை. இது மிக நல்ல இடம் என்று புகழ்ந்து அறிக்கை மட்டும் அனுப்பி வந்தார்கள். இதேபோன்று சிலவேளை அதிகாரிகளின் தவறான வழிகாட்டல்கள் காரணமாக பாதுகாப்புப் பணியாளர்கள் தேவையின்றி சில தடைகளை ஏற்படுத்தி வந்தார்கள்.பொதுவாக அவர்கள் நன்றாகப் பணியாற்றினார்கள். ஆனால், சில இடங்களில் தனிப்பட்ட முறையில் இப்படிப்பட்ட விஷயங்கள் இருந்தன. இதன் காரணமாகவே, லஜ்னாவின் பக்கம் அங்கு உணவைக் கொண்டு சேர்ப்பதிலும் சிரமம் ஏற்பட்டு வந்தது என்று லஜ்னா முறையிட்டுள்ளார்கள்.

பாதுகாப்புப் பணியாளர்களும் நினைவிற் கொள்ள வேண்டும். தடுப்பது மட்டும் அவர்களின் பணியல்ல. வழிகாட்டுவதும் (அவர்களின் பணி) ஆகும். விருந்தினர்களை வசதியாக குறிப்பிட்ட இடத்திற்குக் கொண்டு சேர்க்கக் கூடிய ஒரு குழு அந்தத் துறையிடம் இருக்க வேண்டும்.

அது அவர்களுக்காக வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இதேபோன்று மொழியாக்கம் தொடர்பாக முதல் நாள் சிரமத்தை எதிர் கொள்ள வேண்டி வந்ததாக லஜ்னா தரப்பிலிருந்து ரிப்போர்ட் கிடைத்துள்ளது. இதை எனக்கு லஜ்னா உறுப்பினர்கள் கூறவில்லை. மாறாக, சரியாக மொழியாக்கம் நடைபெறவில்லை என்று நமது MTA மொழியாக்கத் துறை கூறியது. வெளியில் இருந்து வந்திருந்த சில விருந்தினர்கள், மொழியாக்கம் இல்லாததனால் எங்களால் குத்பா கேட்க முடியவில்லை என்று பின்னர் முறையிட்டார்கள். ஒலிபிரச்சனை ஆண்களின் ஹாலில் குறிப்பாக இருந்தது. அதற்காக நான் ஜல்ஸா நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதும் நிர்வாகத்திற்கு கவனமூட்டி வந்தேன். ஜல்ஸாவின் அதிகாரிகள், மாநாட்டுத் திடலின் அதிகாரி மற்றும் ஒலித்துறை பொறுப்பாளர் ஆகியோர் இதற்குப் பொறுப்பாளிகள் ஆவர். மக்கள் இங்கு ஜல்ஸா கேட்பதற்காக வருகின்றார்கள். அதை அவர்களை சரியாக கேட்க வைப்பதற்கான ஏற்பாடு இல்லையென்றால் பின்னர் ஜல்ஸாவால் என்ன பயன்? மற்ற நிர்வாக விவகாரங்களிலோ குறைகள் பொறுத்துக் கொள்ளப்படுகின்றன. ஆனால், ஜல்ஸா கேட்பதற்கான ஏற்பாடுகளில் எந்தக் குறையையும் பொறுத்துக் கொள்ள முடியாது.

இது மக்கள் ஒன்று கூடக் கூடிய திருவிழா ஒன்றும் அல்ல. நான் (பொது) மக்களுக்கு எனது பெருமையை எடுத்துக் காட்டுவதற்காக இப்படி (ஜமாஅத்) மக்களை ஒன்று திரட்டுவதும் எனது நோக்கம் அல்ல என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள்.

ஆனால், சப்தம் கேட்காததனால் பின்பக்கம் சில இடங்களில் திருவிழாவின் நிலைதான் இருந்தது. சில மக்கள் இதை வீடியோ எடுத்து விட்டார்கள். நான் அவற்றைப் பார்த்தேன். ஜல்ஸாவின் சூழல் ஒன்றும் தென்படவில்லை. எனது கணிப்பின்படி, குறைந்தது ஏழு, எட்டு ஆயிரம் பேர் ஜல்ஸாவை சரியாக கேட்காதவர்களாக இருப்பார்கள். மக்கள் பேசிச் கொண்டிருந்தார்கள் என்று நிர்வாகம் மக்களை இதற்கு பொறுப்பாளிகளாக ஆக்குகின்றது. ஆனால், எனது பார்வையில் மாநாட்டுத் திடல் அதிகாரி ஒலித்துறையினர் மற்றும் தர்பிய்யத் துறையினர் இதற்குப் பொறுப்பாளிகள் ஆவர். அவர்கள் இந்த விஷயத்தில் கவனம் செலுத்த வேண்டும். எனக்கோ இந்த நிலையைப் பார்த்து வெட்கம் ஏற்பட்டது. அவர்களுக்கும் வெட்கம் ஏற்பட்டிருக்கும் என்று நான் நம்புகிறேன்.

மக்கள் பேசிக் கொண்டிருந்தார்கள் என்றாலும் அது தர்பிய்யத் குறைபாடுதான். மிஷனரீ இன்சார்ஜ்மார்கள் மற்றும் முரப்பிமார்கள் இதற்கு பொறுப்பாளிகள் ஆவர். அவர்கள் ஏன் ஆண்டு முழுவதும் தர்பிய்யத் வழங்குவதில்லை? ஏன் மக்களிடம் சபைகளின் கண்ணியத்தைப் பற்றிய சிந்தனையை உருவாக்குவதில்லை. மக்களைக் குறைக் கூறாதீர்கள். ஓர் அஹ்மதிக்கு கவனமூட்டப்பட்டால் பொதுவாக நல்ல எதிர் நடவடிக்கையைத் தான் வெளிப்படுத்துவார். இந்த மக்களோ ஜல்ஸாவிற்கு வந்திருந்தார்கள். கவனமூட்டப்பட்டிருந்தால் உடனடியாக சீர்திருத்தம் ஏற்படாமல் இருந்திருக்காது. எவ்வாறு இருப்பினும், அவர்களின் குறையாக இருந்தது. அதன் விளைவாக மற்ற குறைகள் உருவாகின. எங்கு அதிகாரி பணிவுடனும், கடினமாக உழைத்தும் பணிபுரிபவராக இருக்கின்றாரோ அந்தத் துறை அனைத்தும் சிறந்ததாக இருக்கின்றது என்பதையே நான் பார்த்துள்ளேன். இல்லையென்றால், சாதாரண பணியாளர் ஒருவர் நன்றாக பணிபுரிய விரும்பினாலும் அதிகாரிகளின் காரணமாக சரியாக பணிபுரிய முடியாது. எனவே நான் பணியாளர்களை குற்றம் சொல்ல மாட்டேன். ஒவ்வொரு காதிம், ஒவ்வொரு நாஸிர் மற்றும் லஜ்னாவின் ஒவ்வோர் உறுப்பினருக்கும் நான் நன்றி செலுத்துகிறேன். அவர்கள் தம் தரப்பிலிருந்து மிகவும் கடினமாக உழைத்தார்கள். ஆனால், அதிகாரிகள் தமது சீர்திருத்தம் பக்கம் கவனம் செலுத்த வேண்டும்.

நான் முன்னரும் கூறியிருந்தேன். இம்முறை ஆண்களைக் காட்டிலும் பெண்களிடத்தில் எனக்கு அதிகம் ஒழுங்கு தென்பட்டது. ஆண்களின் தர்பிய்யத் துறை தம்மைப் பற்றி கவலைப்பட வேண்டும் என்பது இதிலிருந்து தெரிய வருகின்றது. முன்னேற்றம் அடையக் கூடிய சமுதாயங்கள் தம்முடைய பலவீனங்கள் மீது பார்வை வைத்தால் தான் வெற்றி பெற முடியும். எல்லாம் நன்றாகத் தான் இருந்தது என்றுக் கூறி உங்களின் முன்னேற்றத்திற்கான வழிகளை அடைத்துக் கொள்ளாதீர்கள். இதில் வெட்கப்படுவதற்கும் ஒன்றும் இல்லை. அல்லாஹ் துறைகளின் அதிகாரிகளுக்குத் தம்மை சீர்திருத்திக் கொள்வதற்கு நல்வாய்ப்பு வழங்குவானாக

எவ்வாறு இருப்பினும், இந்த எல்லாக் குறைகளும் இருந்தாலும் கூட அல்லாஹ் நம் மீது பேரருள் புரிந்துள்ளான். அதாவது, அவன் நமது குறைகளைத் திரையிட்டுள்ளான். இங்கு வந்துள்ள ஜமாஅத் அல்லாத விருந்தினர்கள் பொதுவாக ஜல்ஸாவின் மிக நல்ல தாக்கத்தைப் பெற்றுள்ளார்கள். ஜல்ஸா வெற்றி பெற்றது என்றால் நான் கூறியது போன்று அல்லாஹ் குறைகளைத் திரையிட்ட விஷயம் மிகவும் வேலை செய்துள்ளது. அந்த மக்கள் தம்முடைய அசாதாரணமான தாக்கங்களை வழங்கியுள்ளார்கள். அதேபோன்று உலகில் எங்கு MTA மூலமாக ஜல்ஸா காட்டப்பட்டதோ அவர்களும் பொதுவாக ஜல்ஸாவைப் புகழ்ந்துள்ளார்கள்.

பல்கேரியாவில் இருந்து வந்திருந்த கிறிஸ்தவ பெண்மணியான டாக்டர் வீரோனேக்கா சத்தோயீலோவா, வக்கீலும் பல்கலைக் கழகப் பேராசிரியரும் ஆவார். அவர் கூறுகின்றார்: மிகவும் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்ட ஜல்ஸா நடைபெற்றது. நான் பார்த்த எந்த முகங்களிலும் பதற்றமோ கோபமோ, தென்படவில்லை.எல்லா மக்களும் மிகவும் களங்கமற்றவர்களாகவும், எல்லா ரீதியிலும் எப்பொழுதும் உதவி செய்யத் தயாராகவும் தென்பட்டார்கள். ஒவ்வொருவரும் தனது நிலைக்கு நன்றியுள்ளவராக இருந்தார். சந்தேகத்திற்கிடமின்றி, இந்த நிகழ்ச்சி என்னை ஆன்மிக ரீதியில் பசுமையாக்கியது. ஆண்கள், பெண்கள் குழந்தைகள் உட்பட அனைத்து அமைப்புகளும் ஒருங்கமைக்கப்பட்டிருந்தன.

நான் இந்நாட்களில் அஹ்மதிய்யா ஜமாஅத்தைப் பற்றி சுவாரஸ்யமான பல விஷயங்களைக் கற்றுக் கொள்ள முடிந்தது. உதாரணமாக, மத நல்லிணக்கம். மேலும் கருத்து வேறுபாடுகள் இருக்கும் போதிலும் மற்றவர்களை ஏற்றுக் கொள்வது போன்றவை. பெர்லின் பள்ளிவாசலைப் பெண்கள் தங்களுடைய நகைகள் மற்றும் ரொக்கத்தால் கட்டினார்கள் என்ற விஷயத்தால் ஐயமின்றி நான் மிகவும் தாக்கத்திற்கு உள்ளானேன். பெண்களுக்கான ஏற்பாடுகளும் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. மற்ற பல மாநாடுகளுக்கு நான் சென்று வருகிறேன். ஆனால், இந்த விஷயத்தை நான் வேறு எங்கும் கண்டதில்லை என்று என்னால் கூற முடியும். மிகவும் குறைவானவர்களே இப்படிப்பட்ட உதாரணத்தை நிலைபெறச் செய்ய முடியும்.

அடுத்து, என்னுடைய சொற்பொழிவுகள் பற்றி அன்னார் கூறுகின்றார்கள்: ஆன்மிகம், மனிதம் மற்றும் அமைதி ஆகியவற்றைப் பற்றிய சிந்தனைகள் என்னை மிகவும் தாக்கத்திற்கு உள்ளாக்கின. நாம் முதலில் மனிதர்கள் ஆவோம். பிறகு, ஒரு நாட்டின் குடிமக்கள் ஆவோம். பிறகு, மத ரீதியிலான சகோதரத்துவத்தின் அங்கம் ஆவோம் என்பதையே நான் நம்புகின்றேன். நாம் நம்மிடையே ஒத்துப் போகின்ற விஷயங்களைத் தேட வேண்டுமே தவிர நம்மைப் பிரிக்கும் வேறுபாடுகளை அல்ல.

பின்னர், பல்கேரியாவில் இருந்து வந்திருந்த ஒரு கிறிஸ்தவ பெண்மணி நத்தாலியோ ஸாஹிபா முதல் முறை ஜல்ஸாவில் வந்துள்ளார். அவர் கூறுகிறார்: மாநாடு எனது சிந்தனையில் பதிந்திருக்கும். நான் முதல்முறை ஆயிரக்கணக்கான முஸ்லிம்களை ஒன்றாக இறைவழிபாடு செய்யக் கண்டுள்ளேன். இது மிகவும் அழகான காட்சியாக இருந்தது. நான் கிறிஸ்தவ பெண்ணாவேன். இப்படிப்பட்ட ஒரு மாநாட்டில் முதல் முறை கலந்து கொண்டுள்ளேன்.

எல்லாரும் எங்களுடன் பணிவுடனும் நல்லொழுக்கத்துடனும் நடந்து கொள்கிறார்கள். இதனால் ஒரு விநோதமான மகிழ்ச்சி உணர்வு ஏற்பட்டது. மாநாட்டின் இறுதி அமர்வு எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அதில் காலத்தின் கலீஃபாவின் உரை மிகவும் பாடம் கற்பிப்பதாக இருந்தது. என்னை அதிகம் தாக்கத்திற்கு உள்ளாக்கிய விஷயம் எது என்றால், நாங்கள் மிகவும் முக்கியஸ்தர்கள் என்பது போன்று அனைவரும் எங்களுடன் பணிவுடன் நடந்து கொண்டார்கள். எந்த விருந்தாளிக்கும் எந்தக் கஷ்டமும் ஏற்பட்டு விடக் கூடாது என்பதை உறுதிப்படுத்துவதற்காக டியூட்டியில் இருந்த மக்கள் முழு முயற்சி செய்து கொண்டிருந்தார்கள்.

பிறகு அவர் கூறுகின்றார்: முதல் நாள் மொழிபெயர்ப்பு ரீதியாக எங்களுக்கு சிறிது பிரச்சனை இருந்தது.அது பிறகு சரியாகிவிட்டது.

இவர் இந்த முறையீட்டை மிகவும் மூடி மறைக்கச் செய்திருக்கிறார். ஆனால் குத்பா கேட்க முடியவில்லை என்பதுதான் விஷயமாகும்.

அடுத்து, மக்தூனியாவின் ஒரு பெண் விருந்தினரான ஒரு கிறிஸ்தவ எழுத்தாளர் லியூபன்கா ஆயத் விஸ்கா ஸாஹிபா; அவர் கூறுகின்றார்: ஆண்டு மாநாட்டின் ஏற்பாடு மிக உயர்ந்த மட்டத்தில் இருந்தது. பல மார்க்கங்கள் மற்றும் சமுதாயங்களின் மக்கள் கலந்து கொண்ட இவ்வளவு பெரிய ஒருங்கமைக்கப்பட்ட ஒரு நிகழ்ச்சியில் நான் பங்கேற்பதை எனது சிறப்பான கண்ணியமாகக் கருதுகின்றேன். அன்பு மட்டுமே உலகை ஒரு சிறந்த இடமாக ஆக்க

முடியும் என்ற முழக்கத்திற்கு இந்த விஷயம் சான்று பகர்கின்றது.

அடுத்து, மக்தூனியாவில் இருந்தே ஒரு முஸ்லிம் எழுத்தாளர் சேனாவர் ஆயிஸ்மூ என்பவர். அவர் எழுதுகின்றார்: காலத்தின் கலீஃபா அவர்கள் பல்வேறு தலைப்புகளில் ஆற்றிய சொற்பொழிவுகள் என்னை தாக்கத்திற்கு உள்ளாக்கின. அவர் கூறுகிறார்: மக்தூனியாவின் ஓர் எழுத்தாளராக இருக்கும் வகையில் எனக்கு மாநாட்டில் பல அஹ்மதி முஸ்லிம்களுடன் உரையாடும் வாய்ப்பு கிடைத்தது. அவர்கள் எப்பொழுதும் புன்சிரித்தவாறு என்னுடன் உரையாடினார்கள். நான் மாநாட்டின் தூய்மை மற்றும் அனைத்து ஏற்பாடுகளினாலும் மிகவும் தாக்கத்திற்கு ஆளாகினேன்.

எல்லாரிடத்திலும் அன்பு; எவரிடத்திலும் இல்லை வெறுப்பு எனும் உங்களுடைய குறிக்கோள் உண்மையாகவே தென்பட்டது. இந்தக் குறிக்கோளினாலேயே அமைதி நிலை பெற முடியும். பணியாளர்கள் மட்டுமல்லாமல் மக்களுடைய அணுகுமுறைகளும் விருந்தாளிகளை மிகவும் தாக்கத்திற்கு உள்ளாக்கின.

சில்வாக்கியவில் இருந்து வந்திருந்த ஓர் ஆசிரியை மார்ட்டினா ஸாஹிபா கூறுகின்றார்: முதல் முறை நான் ஜல்ஸாவில் கலந்து கொண்டதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நான் எத்தகைய விருந்தோம்பலின் காட்சியைக் கண்டேன் என்றால், அநேகமாக அது முழு உலகிலும் தென்படுவதில்லை. ஒவ்வொருவரும் நல்லொழுக்கத்துடனும், புன்சிரித்த முகத்துடனும் சந்தித்து வந்தார்கள். இந்த முழு மாநாடு எனது உள்ளத்தில் ஆழமான ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. குறிப்பாக, பைஅத் மற்றும் தொழுகையின் போது, என்னால் என்னுடைய உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. பைஅத் நிகழ்ச்சி முழுவதிலும் அழுது கொண்டே இருந்தேன். எவ்வாறு அஹ்மதிகள் அனைவரும் கலீஃபா அவர்களின் கரத்தில் ஒரே உயிராக மாறி பைஅத்தில் கலந்து கொண்டார்கள் என்ற அந்தத் தருணத்தை நான் என் வாழ்நாள் முழுவதும் மறக்க மாட்டேன். இவ்வாறே நான் அஹ்மதிகளின் கலீஃபா அவர்களை சந்தித்ததையும் ஒருபோதும் மறக்க மாட்டேன். ஒருநாள் கழிந்தும் அந்த சந்திப்பின் தாக்கம் என் உள்ளத்தில் உள்ளது.

அவர் கூறுகின்றார்: நான் நிச்சயமாக (மீண்டும்) ஒருமுறை கலீஃபா அவர்களை சந்திக்க விரும்புகின்றேன்.

அதாவது, அவர் என்னை சந்திக்க விரும்புகிறார். இஸ்லாம் குறித்து நேரடியாகத் தகவல்களைப் பெற விரும்புகின்றேன். இவர் முஸ்லிம் இல்லை. ஆனால் இவர் மீது தாக்கம் ஏற்பட்டுள்ளது.

சில்வாக்கியாவில் இருந்து வந்திருந்த ஓர் ஆண் விருந்தினர் ஒன்டாரிஸ்கா ஸாஹிப், இவர் தொழில் அதிபர் ஆவார். இவர் கூறுகின்றார்: மாநாட்டிற்கு முன்பு நான் இஸ்லாத்தைப் பற்றி எதுவும் அறிந்திருக்கவில்லை. எனது நிலை எந்த அளவு இருந்தது என்றால், முஸ்லிம்கள், முஹம்மது ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களை இறைவனாக ஏற்பதாக நான் நினைத்திருந்தேன். நவூதுபில்லாஹ்.

மாநாட்டில் கலந்து கொண்டு எனக்கு இஸ்லாத்தின் போதனை அல்லாஹ் மற்றும் நபி (ஸல்) அவர்களுடைய உண்மையான அந்தஸ்தைப் பற்றிய அறிமுகம் கிடைத்தது. மேலும், இஸ்லாம் உண்மையில் அமைதியை விரும்பக் கூடிய ஒரு மார்க்கமாகும் என்பதும் தெரிய வந்தது. இங்கு குறிப்பாக ஊடகம் இஸ்லாத்தைப் பற்றி தவறான கருத்துகளை முன் வைக்கின்றது. இந்த முழு மாநாட்டிற்கான ஏற்பாட்டையும் அஹ்மதிகள் தாமே செய்கிறார்கள் என்பதும், எந்த அளவிற்கு ஈடுபாட்டோடும், எவ்வளவு உத்வேகத்துடனும் உணர்வுடனும் விருந்தாளிகளுக்குத் தொண்டாற்றுகின்றார்கள் என்பதும் எனக்கு வியப்பாக இருக்கிறது. அவர் கூறுகின்றார்: நான் காலத்தின் கலீஃபா அவர்களைப் பார்த்த பொழுது எனது உள்ளத்தில் அமைதியும், ஆன்மாவில் நேர்மறையான தாக்கமும் ஏற்பட்டது. அவர் கூறுகின்றார்: இறைவன் தான் என்னை இந்த மாநாட்டில் கலந்து கொள்ளச் செய்துள்ளான் என்று நான் உறுதியாக நம்புகின்றேன்.

பின்னர், சில்வாக்கியாவில் இருந்து வந்திருந்த ஒரு விருந்தினர் ஜோதர் மார்டன் ஸாஹிப் ஆவார். பல்வேறு நாடுகளில் இருந்து மிகப் பெரும் பெரும் குழுக்கள் வந்திருந்தன. அவர் கூறுகின்றார்:

நான் முதல்முறை ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டேன். எனக்கு அஹ்மதிகளுடைய நல்லொழுக்கங்கள் மற்றும் விருந்தோம்பலைக் கண்டு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டது. ஆண்டு மாநாட்டில் நான் நிறைய விஷயங்களை கற்றுக் கொள்ள முடிந்தது. முஸ்லிம்கள் குறிப்பாக அஹ்மதிகள் அமைதியை விரும்பக் கூடியவர்களும், தங்களுடைய போதனைப்படி செயல்படுபவர்களும் ஆவர். ஜமாஅத் ஏற்பாடு செய்திருந்த கண்காட்சி எனக்குப் பிடித்திருந்தது. நான் இஸ்லாம் மற்றும் அதனுடைய அழகிய போதனைகளைப் பற்றி மிக அதிகமாக கற்றுக் கொள்ள முடிந்தது.

ஒவ்வோர் அஹ்மதியும் அவர்களுடைய கலீஃபாவை மிகவும் நேசிக்கின்றார் என்பதையும் (கலீஃபா) அவர்களும் அவர்களை மிகவும் நேசிக்கின்றார்கள் என்பதையும் நான் பார்த்தேன். இத்தகைய சகோதரத்துவமும் நேசமும் உலகில் குறைவாகவே தென்படுகிறது.

செர்பியா மற்றும் போஸ்னியாவின் வரைபடம் கண்காட்சியில் அமைக்கப்பட்டிருந்தது. அதைப் பற்றி அநேகமாக எங்களுடைய வரைபடம் சரியாக அமைக்கப்படவில்லை என்று செர்பியன் மக்களுக்கு முறையீடு இருப்பதாக நான் கருதுகின்றேன். அங்கு ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. கண்காட்சியின் பொறுப்பாளர்கள் அதைப் பார்த்துக் கொள்ளட்டும்.

அல்பானியாவின் ஒரு விருந்தினர் பேராசிரியர் டாக்டர் ஜீப் ஷுகூர்தீ ஸாஹிப். இவர் Faculty of Nature Science இல் திரானா பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் ஆவார். தம் மனைவியுடன் வந்திருந்தார். அவர் கூறுகின்றார்: மாநாடு மிகவும் மகத்துவ மிக்கதாக இருந்தது. இவர் முஸ்லிம் ஆவார். கூறுகின்றார்: நான் பத்து வருடங்களாக நோன்பு வைக்கின்றேன். இஸ்லாத்தின் எல்லாக் கட்டளைகளையும் கடைபிடிக்கவில்லை என்றாலும் மற்ற (சில) கட்டளைகளையும் பேணி நடக்கின்றேன். இங்கு நான் மாநாட்டில் இஸ்லாத்தைக் கண்டேன். மற்ற முஸ்லிம்களை விட்டும் உங்களுக்கு இருக்கும் வெளிப்படையான வேறுபாடு கிலாஃபத் ஆகும். அதன் காரணமாக உங்களிடம் ஒற்றுமையும் உள்ளது.

அல்பானியாவில் இருந்து வந்திருந்த ஒரு பெண் விருந்தினர் எல்மீரா ஸாஹிபா, செவிலியர் ஆவார்.

அவர் கூறுகின்றார்: இதற்கு முன்பும் நான் மாநாட்டிற்கு வந்துள்ளேன்.

இந்த முறை அதே ஆன்மிகத் துடிப்பின் காரணமாக மீண்டும் மாநாட்டுக்கு வந்துள்ளார். ஒருமுறை வந்துவிட்டால் பின்னர் அந்நியர்களானாலும் பழக்கம் ஏற்பட்டு விடுகின்றது.

அவர் கூறுகிறார்: இந்த முறை முதல் முறையாக நான் தொழுதேன். என்னுடன் தோழி ஒருவர் இருந்தார். அவர் தொழுது கொண்டிருந்தார். அவரைப் பார்த்து பார்த்து நானும் தொழுது கொண்டிருந்தேன். அவர் கூறுகிறார்: முதல் முறை எனது ஆன்மாவின் ஒவ்வோர் அணுவும் இயங்கத் தொடங்கியது. ஸஜ்தாவில் அழுது துஆக்கள் செய்து கொண்டிருந்தேன். என்னுடைய வெறுப்புகள் அனைத்தும் உருகுவதாக நான் உணர்ந்தேன். நான் துஆ செய்கின்றேன். அல்லாஹ் எனக்கு என்னுடைய ஈமானில் உறுதியை வழங்குவானாக!

பின்னர், என்னுடன் நிகழ்ந்த சந்திப்பையும் நன்றாக நினைவில் வைத்திருப்பேன் என்று கூறுகிறார்கள். ஆக, ஜல்ஸாவின் சூழ்நிலையின் தாக்கத்தை அந்நியர்களும் பெறுகின்றனர். அஹ்மதிகள் பெறாமல் இருப்பது எவ்வாறு சாத்தியமாக முடியும்? எனவே பொறுப்பாளர்கள் அஹ்மதிகளைக் குற்றம் சுமத்துவதற்கு பதிலாக சீர்திருத்துவதற்கான சரியான வழியை மேற்கொள்ள வேண்டும். முதலில் சுய சீர்திருத்தம்; சொந்த முன்மாதிரி. பிறகு மக்களுக்குப் புரிய வையுங்கள்.

அல்பானியாவில் இருந்து வந்திருந்த ஒரு பெண் விருந்தினர் தெரீத்தே ஷுகூர்த்தீ ஸாஹிபா உயர்நிலைப் பள்ளியின் ஆசிரியை ஆவார். அவர் கூறுகிறார்: மநாட்டின் ஏற்பாடுகள் மிகவும் உயர்வாக இருந்தன. நான் பள்ளிக் கூடத்தில் ஆசிரியையாக உள்ளேன். இன்றைய கால குழந்தைகள் எவ்வளவு ஆக்ரோஷமானவர்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனால், இங்கு குழந்தைகள் கூட எவ்வளவு தெளிவடைந்தவர்களாக இருந்தார்கள் என்றால் தம்முடைய டியூட்டிகளில் மூழ்கியிருந்தார்கள்.

அத்ஃபாலும் கூட, பிள்ளைகளும் கூட நல்ல முன்மாதிரியைக் காட்டி தப்லீஃகிற்கான வழிகளைத் திறந்துள்ளார்கள்.

அவர் கூறுகின்றார்: எனக்கு மிகவும் வியப்பு ஏற்படுத்தக் கூடியதாக இருந்தது. அறிந்து கொள்ளும் ஆர்வம் என்னை மாநாட்டின்போது சந்தைக்கு முன்னால் இருந்த பொதுவான உணவு ஹாலின் பக்கம் அழைத்துச் சென்றது. அங்கும் நான் ஆயிரக்கணக்கான ஆண்கள் உணவு உண்டு கொண்டிருப்பதைக் கண்டேன். ஆனால், எவ்வித சண்டையையோ இழுத்தல், பறித்தல் போன்றவற்றையோ முற்றிலும் பார்க்கவில்லை. அவர்கள் வேலை மட்டும் செய்யத் தெரிந்த தேனீக்கள் போன்று இருந்தார்கள். மக்கள் எல்லாப் பணிக்காகவும் தயாராக இருந்தார்கள். நல்லொழுக்கங்கள் எவ்வளவு உயர்வாக இருந்தன என்றால் லேசாக இடித்துக் கொண்டாலும் உடனடியாக மன்னித்து விடுங்கள் என்று கூறிவந்தார்கள்.

அல்பானியாவில் இருந்து வந்திருந்த ஒரு விருந்தினர் ஜாஃபர் கோச்சீ ஸாஹிப் எக்னாமிக்ஸில் முதுகலைப் பட்டம் பெற்றவர்.

நான்கு ஆண்டுகள் ஆய்வு செய்த பிறகு அவர் பைஅத்தும் செய்துவிட்டார். அவர் கூறுகின்றார்:

மாநாடு அவருக்கு மிகவும் ஊக்கமளிப்பதாக இருந்தது. மிகவும் நேர்மறையான ஆற்றலைத் தந்து சென்றது. மாநாட்டுத் திடலில் காலத்தின் கலீஃபா அவர்களுடன் தொழுகைகளில் எனக்கு எனது கண்ணீர் கட்டுப்பாடு இல்லாமல் போனது. இதே போன்று பைஅத் நிகழ்ச்சியும் மிகவும் உணர்ச்சிப்பூர்வமானதாக இருந்தது. நான் எப்பொழுதும் காலத்தின் கலீஃபா அவர்களுடன் அமர்ந்து பாதுகாப்பாக இருப்பதை உணர்ந்தேன். காலத்தின் கலீஃபா அவர்கள்தான் எனது அன்பிற்குரியவரும் நான் பின்பற்ற வேண்டியவரும் ஆவார் என்றே நான் உணர்ந்தேன். அவர் கூறுகின்றார்: இதைத் தவிர்த்து ஒரு விஷயம் எனக்குப் பிடிக்கவில்லை. அது மக்கள் சம்மந்தப்பட்டது. இதையும் மக்கள் குறித்துக் கொள்ள வேண்டும்.

அது என்னவென்றால், மாநாட்டில் பலமுறை சில மக்கள் உரை முடிவதற்கு முன்பே எழுந்து சென்று வந்தார்கள்.

எனவே புதிதாக பைஅத் செய்தவர்கள் மீது எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தி விடக் கூடாது என்ற விஷயத்தைப் பற்றிய கவலையும் நமக்கு இருக்க வேண்டும்.

போஸ்னியாவில் இருந்து வந்திருந்த வரலாற்றுப் பாடத்தின் பேராசிரியர் ஹாரிஸ் ஸாஹிப் கூறுகின்றார்: மாநாட்டுக்கு வருவதற்கு முன்பு அங்கு ஆயிரக்கணக்கான மக்கள் இருப்பார்கள்; கலீஃபா அவர்கள் நம்முடன் உரையாற்றுவார்கள் என்பது எனக்குத் தெரிய வந்தது. நான் சற்று அச்சத்திற்காளாகியிருந்தேன். ஓரளவு முன் எச்சரிக்கையுடனும் இருந்தேன். அஹ்மதிகளைப் பற்றியும், இவ்வளவு பெரிய மாநாடு பற்றியும் அவர்களின் மார்க்க வழக்கங்கள் பற்றியும் விவரமாக எனக்குத் தெரியாமல் இருந்ததால் எல்லாவற்றைக் குறித்தும் சந்தேகத்திற்கு ஆளாகியிருந்தேன். ஏனெனில், நான் அடிப்படை விஷயங்களில் உழன்று கொண்டிருந்தேன்.

பிறகு கூறுகிறார்: இதற்கு முன்பு எனக்கு இந்த அளவு நல்ல மக்களுடன் நேரத்தைக் கழிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. என்ன நிகழ்ந்தது!இது எனது சிந்தனையாக இருந்தது! வந்தடைந்ததும் என்ன ஆனது! இதற்கு முன்பு எனக்கு இந்த அளவு நல்ல மக்களுடன் நேரத்தைக் கழிப்பதற்கும் ஒருபோதும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. மாநாட்டில் ஒவ்வொன்றுக்கும் திட்டம் வகுக்கப்பட்டிருந்தது. என்ன நினைத்து வந்தார்! என்ன நடப்பதைப் பார்த்தார்! நல்ல திட்டம் வகுக்கப்பட்டிருந்தது. ஒவ்வொருவரும் தனது பணியில் ஈடுபட்டிருந்தார். மாபெரும் அமைப்பு மற்றும் அழகான கட்டமைப்பு!

அவர் கூறுகிறார்: கலீஃபா அவர்களின் முதல் சொற்பொழிவுக்குப் பிறகு எனது சிந்தனை தெளிவாகிவிட்டது. அவர்கள் என்ன பேசுகிறார்கள். எப்படி பேசுகிறார்கள்? அவர்களுக்கு ஒருவர் மற்றவருடனான தொடர்பு எப்படி உள்ளது? என்று நான் மக்களை பின்தொடந்து கொண்டிருந்தேன்.

அறிந்து கொள்ளும் ஆர்வம் இருந்தது. மக்களுக்குப் பின்னாலேயே சென்று கொண்டிருந்தார்.

அவர் கூறுகிறார்: நான் இது அனைத்தையும் பார்த்துக் கொண்டும், கேட்டுக் கொண்டும் இருந்தேன். நான் என்னுடைய முஸ்லிம் சகோதரர்களிடம் நான் பாதுகாப்பாக இருப்பதை உணர்ந்தேன். எவரும் என்னைத் தவறாகவும் கூறவில்லை ; என்னைப் பொறாமையோடும் அந்நியமாகவும் பார்க்கவில்லை ; எந்த விஷயத்திலும் எவரும் என்னை விமர்சனத்துக்கு உள்ளாக்கவில்லை என்பதை(யும்) உணர்ந்தேன்.

இந்த எல்லா விஷயங்களிலும் எனக்கு கர்வத்திற்குரியதாகவும், தனிச்சிறப்புடையதாகவும் விளங்கிய விஷயம் ஒன்று உள்ளது. இதற்கு முன் அதற்கான அனுபவம் என் வாழ்வில் எனக்கு ஏற்பட்டதில்லை. அது காலத்தின் கலீஃபா அவர்களுடனான சந்திப்பு ஆகும். ஆனால், என்னுடைய முதுகில் இருந்து ஏதோ கல் விழுந்து விட்டது போன்று எனக்கு நிம்மதியாக இருந்தது. நான் கவலையாக இருந்தேன். ஆனால், இப்பொழுது கவலையற்றவனாக இருக்கின்றேன். நான் திருப்தியாக திரும்பிச் செல்கிறேன். சந்கேமின்றி, அறிவு எனும் செல்வத்தாலும் நான் சந்தித்த நல்ல மக்க(ளின் நினைவுக)ளாலும் நிறைந்துள்ளேன்.

போஸ்னியாவில் இருந்து வந்திருந்த ஒரு பெண் விருந்தினர் இந்திரா ஹைதர் ஸாஹிபா,ரெட் கிராஸின் செக்ரட்டரீ ஆவார். அவர் கூறுகின்றார்; என்னை சந்தித்ததைப் பற்றி கூறுகிறார்:

(கலீஃபா) அவர்களை ஃபிரான்க்ஃபூர்டில் சந்தித்தேன். அன்னார் நல்ல விஷயங்களைப் பேசுவதால் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. எனக்கு காலத்தின் கலீஃபா அவர்கள் பேசுவதை நேரடியாகக் கேட்கும் வாய்ப்பு கிடைத்தது. அவர் கூறுகின்றார்: அஹ்மதிய்யா ஜமாஅத் மற்றும் Humanity First அமைப்பு பல்வேறு கஷ்டங்கள் இருந்தும், எங்கள் நாட்டில் எந்த அளவிற்கு களங்கமற்ற முறையில் படைப்பினங்களுக்குத் தொண்டாற்றும் பணியை செய்கிறார்கள் என்றால் இங்கு வந்த பிறகு எனக்கு நம்பிக்கை வந்து விட்டது. அதாவது, அவர்களின் தன்னார்வத் தொண்டர்களுக்கு மனித குலத்திற்கு இந்த அளவு தன்னலமற்று தொண்டாற்றும் உணர்வு இருப்பதற்கு அசல் காரணம் கிலாஃபத் ஆகும். உண்மையும் இதுவே.

பிறகு கூறுகின்றார்: உலகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து பல்வேறு மனிதர்களை அஹ்மதிய்யா ஜமாஅத் எந்த அளவுக்கு ஒருமைப்பாட்டின் சரடில் கோர்த்துள்ளது. இந்த மனிதகுலம் முழுவதையும் ஒரே சமுதாயமாக ஆக்குவதிலும் உலகை சிறப்பானதாக ஆக்குவதற்காகவும் தனது பங்களிப்பை அளிப்பது தொடர்பாக அனுபவமானது நான் துணிவுள்ளவளாக ஆகுவதில் எனது புரிதலை ஆழமாக்கி விட்டது. எனது புரிதலை ஆழமாக்கி விட்டது.

இந்த சந்தர்ப்பமானது எனக்கு நான் முஸ்லிமாக இருப்பதில் பெருமைப்படுவதற்கு மட்டுமே ஆற்றலை வழங்கவில்லை ; அதற்கும் மேற்பட்டு மனித அனுதாபத்திற்கான முயற்சிகள் மற்றும் மதங்களுக்கு இடையிலான உரையாடல்களை ஊக்குவிப்பதில் நான் மேற்கொண்டு இணைவதற்கு எனக்கு எழுச்சியூட்டியது.

போஸ்னியாவில் இருந்து வந்திருந்த ஒரு பெண் விருந்தினர் அமீனா ஸாஹிபா கூறுகிறார்: தன்னார்வத் தொண்டர்களின் அமைப்பு மிகவும் நன்றாக இருந்தது. பெண்கள் பகுதியில் மொழியாக்கப் பிரச்சனையின் காரணமாக எங்களால் சில நிகழ்ச்சிகளைக் கேட்க முடியவில்லை. ஏனெனில், பெண்கள் பகுதியில் மொழிபெயர்ப்பு எதுவும் இருக்கவில்லை.

நான் ஆரம்பத்தில் கூறிய விஷயத்திற்கு இவரும் சான்று பகர்கிறார். காலத்தின் கலீஃபா அவர்களின் உரையை எனக்காக எங்கள் பெண்கள் குழுவின் தலைவி மொழிபெயர்த்தார்கள். எப்பொழுதும் நிகழ்ச்சி திருக்குர்ஆனின் திலாவத்துடன் அதன் மொழியாக்கத்துடன் துவங்கியது எனக்குப் பிடித்திருந்தது.

அவர் கூறுகின்றார்: முஸ்லிம்கள் அதிகமாக படிக்க வேண்டும்; மேலும், தமது அறிவுக்கு செயல் வடிவம் கொடுக்க வேண்டும்; இதுவே உம்மத்தின் தற்போதைய நிலையை மாற்றியமைக்கக் கூடிய ஒரே வழியாகும் எனும் காலத்தின் கலீஃபா அவர்களின் அறிவுரை (பிடித்திருந்தது).

அடுத்த நாள் மீண்டும் மொழியாக்கத்தில் பிரச்சனை ஏற்பட்டபோது எங்கள் பெண்கள் மொழியாக்கத்தைக் கேட்பதற்காக ஆண்கள் பகுதிக்குச் சென்றார்கள். அவர்கள் பெண்கள் பகுதியில் இருந்தார்களாம்.

எவ்வாறு இருப்பினும், அவர் கூறுகின்றார்: பெண்களுக்கான உரை மிகவும் உதவக்கூடியதாக இருந்தது. அதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்துப் பெண்களின் உதாரணங்களை வழங்கினார்கள். அவை எனக்கு மிகவும் பிடித்திருந்தன.

பிறகு கூறுகிறார்: ஞாயிற்றுக் கிழமை நிகழ்ச்சியிலும் அடிப்படையான இஸ்லாமிய விதிகள் மற்றும் பிறரின் உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பாக உரையாற்றினார்கள். நாம் ஒவ்வொரு விஷயத்திலும் சிறந்தவர்களாக ஆக வேண்டும். இந்த விஷயம் என் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

நாம் நீதியுடன் நடந்து கொண்டால்தான் நாம் முன்னேற்றம் அடைவோம்; சமுதாயத்தில் அமைதி நிலைபெறும் என்பது குறித்து கூறினார்கள்.

பிறகு கூறுகிறார்: இந்த அனைத்து விஷயங்களையும் நான் எடுத்துச் செல்கிறேன். இவை எனக்கு கலங்கரை விளக்கமாகும்.

ஜார்ஜியாவைச் சேர்ந்த ஒரு பெண்மணி லியா ஸாஹிபா ஆவார். இப்போது ஹாலந்தில் இருக்கிறார். வேதாந்திர சாஸ்திரம் மற்றும் மத ஆய்வுகளில் முதுகலை கல்வி பயில்கின்றார். ஜார்ஜியாவைச் சேர்ந்தவர் ஆவார்.

அவர் கூறுகிறார்: எப்படி சிறியவர்களும் பெரியவர்களும் சிறப்பான ஆர்வத்துடன் தமது தொண்டுகளை ஆற்றுகிறார்கள் என்று முதல் முறை ஜல்ஸாவைப் பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது.

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

உலகளாவிய பைஅத் நிகழ்ச்சியைக் கண்டு உணர்ச்சிகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியவில்லை. மாநாட்டின் இறுதி நாளில் நாங்கள் இஸ்லாத்திற்கு ஏற்ப இனி எங்களுடைய வாழ்வை அமைத்துக் கொள்வோம் என்று எல்லாரிடமும் ஒரு வாக்குறுதி பெறப்பட்டது. அந்த பைஅத்தில் இருந்து அவர் இந்தப் பாடத்தைக் கற்றார்.

அவர் கூறுகிறார்: அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கலீஃபா அவர்கள் எழுதுகோலால் செய்யப்படும் போர் பற்றிய கண்ணோட்டத்தை நம் முன் வைத்தார்கள்.

இந்த முக்கியமான விஷயம் எனது சிந்தனையில் பதிந்து விட்டது. நான் இதை நூறு சதவிகிதம் ஆமோதிக்கின்றேன். பெண்களுக்கும் இஸ்லாத்தின் போதனையைப் பரப்ப வேண்டும் என்று இஸ்லாம் வலியுறுத்துவது எனக்கு மிகவும் பிடித்திருந்தது. வருங்காலத்தில் உலகம் இஸ்லாத்தைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்கும் என்றும், அதன் மூலமாக மக்கள் தம் இறைவனை அடையாளம் காணக்கூடியவர்களாக இருப்பார்கள் என்றும் நான் உறுதியாக நம்புகிறேன்.

ஜார்ஜியாவில் இருந்து ஒரு சன்னிப் பிரிவின் அறிஞர் வந்திருந்தார். மிஸ்டர் வேஸல். அவர் கூறுகிறார்: நான் ஜார்ஜியாவில் வசிக்கின்றேன். 15 வயதில் நான் கிறிஸ்தவத்தை விட்டு விட்டு இஸ்லாத்தை ஏற்றேன். அதற்குப் பிறகு, நான் ஏறத்தாழ 15 ஆண்டுகள் மதீனா முனவ்வராவில் கழித்தேன். இஸ்லாத்தைப் பற்றிய அறிவையும் அரபு மொழியையும் நான் மதீனாவில் கற்றேன். எனது கல்வியின் போது எனக்கு உங்களது ஜமாஅத்தைப் பற்றி எதிர்மறையான விஷயங்கள் கேட்கக் கிடைத்தன. அதாவது, அஹ்மதிகள் எங்களைக் காஃபிர்கள் என்று கூறுகிறார்கள். அஹ்மதிகளின் கொள்கையே மாறுபட்டது முதலியவை.

அவர் கூறுகிறார்: ஜார்ஜியாவில் உங்கள் ஜமாஅத்தின் மிஷனரீயை சந்தித்தேன். அஹ்மதிய்யா ஜமாஅத் பற்றிய அறிகமுகம் கிடைத்தது. நீங்கள் பல்வேறு கிராமங்களில் குர்பானி இறைச்சியை விநியோகம் செய்தீர்கள். எங்களை அணுகினீர்கள். நாங்கள் உதவி புரிந்தோம். பிறகு கூறுகிறார். பிறகு தம்மைப் பற்றி எழுதுகிறார். ஜல்ஸாவில் வருவதற்கு முன்னர், அஹ்மதிகளிடம் செல்கிறேன்; ஜாமிஆ அஸ்ஹர் என்ன கூறுகிறது? என்று (பார்க்கலமா என்று) ஜாமிஅத்துல் அஸ்ஹரில் இருந்து இவர் ஜமாஅத் பற்றிய ஃபத்வாக்களை (மார்க்கத் தீர்ப்புகளைப்) பார்த்தார். இவர் கூறுகிறார்:

நான் ஜமாஅத் பற்றி அனைத்து இஸ்லாமிய சமுதாயத்தின் சிந்தனைகளையும் படித்தேன். அனைத்து ஃபத்வாக்களையும் பார்த்த பிறகு, நான் அஹ்மதிய்யா ஜமாஅத்தை அருகிலிருந்து பார்க்க விரும்புகின்றேன் என்றே நான் தீர்மானித்தேன். மக்களோ காஃபிர்கள் என்று கூறுகிறார்கள். இவர்கள் யார்? என்று நான் பார்க்க வேண்டும் (என்று நினைத்தேன்).

பிறகு ஜல்ஸாவில் வந்து ஜமாஅத்தை அருகிலிருந்து பார்த்து விட்டு இவ்வாறு கூற ஆரம்பித்துவிட்டார்:

அஹ்மதிய்யா ஜமாஅத் நிச்சயமாக இஸ்லாத்தின் அங்கமாகும். மேற்கொண்டு கூறுகிறார்: நான் கலீஃபா அவர்களின் சொற்பொழிவுகளை கவனமாக செவிமடுத்தேன். உங்களை காஃபிர்கள் என்று கூறுவது முற்றிலும் தவறானது என்ற முடிவுக்கு வந்துள்ளேன். நீங்களும் மற்ற பிரிவுகளைப் போன்று இஸ்லாத்தின் ஒரு பிரிவினர் ஆவீர்கள்.

அவர் கூறுகிறார்: நான் கலீஃபா அவர்களை மிகவும் மதிக்கின்றேன். எனது சிந்தனையில் பல கேள்விகள் இருந்தன. அவை ஜல்ஸாவில் மூன்று நாட்களில் பல்வேறு அமர்வுகளில் தீர்ந்து விட்டன. உங்களது ஜமாஅத் பற்றியும் உங்களுடைய தோற்றுநர் அவர்கள் பற்றியும் விளக்கமாகப் பேசுவதற்கான நல்வாய்ப்பு கிடைத்தது. ஜார்ஜியாவுக்குத் திரும்பிச் சென்று உங்களுடைய ஜமாஅத்தின் பல்வேறு நூல்களை வாசிக்க ஆரம்பிப்பேன். உங்களை சந்தித்ததால் எனக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது.

அடுத்து, குஸேவோவில் இருந்து வந்திருந்த ஒரு விருந்தினர் நகராட்சி Icon இன் அதிகாரப்பூர்வ கல்வி இயக்குனர் ஆவார். அவர் கூறுகிறார்: ஜல்ஸாவின் நாட்களில் நான் சொற்பொழிவுகளைக் கேட்டேன். விஷயங்களைக் கற்றுக் கொண்டேன். இவை எனது நினைவில் என்றும் பதிந்திருக்கும். நான் குஸோவாவில் என்னுடைய நண்பர்களுக்கும் உடனிருப்பவர்களுக்கும் இந்த மாநாட்டைப் பற்றி கூறுவதற்காகத் தவித்துக் கொண்டிருக்கின்றேன்.

குறிப்பாக, நான் காலத்தின் கலீஃபா அவர்கள் எடுத்துரைத்த போதனைகளின் படி அமல் செய்வேன். மேற்கொண்டு நானும் என்னுடன் இருந்தவர்களும் எந்த அசாதாரணமான மற்றும் அன்பால் நிறைந்திருந்த விருந்தோம்பலை அனுபவித்தோமோ அது எங்களுடைய உள்ளங்களில் என்றென்றும் இருக்கும். அல்லாஹ் உங்கள் அனைவருக்கும் எண்ணற்ற மகிழ்ச்சியை வழங்குவானாக!

பிறகு கூறுகிறார்: குஸோவாவில் இருந்து வந்திருந்த ஒரு விருந்தினர் ஒனீஜீ ஸாஹிப் லீஜான் பல்கலைக் கழகத்தின் மேயர் மற்றும் அமைச்சரவைத் தலைவர் ஆவார். அவர் கூறுகிறார்:

எனக்கு அசாதாரணமான மற்றும் நிச்சயமாக தாக்கம் ஏற்படக் கூடிய அனுபவமாக இருந்தது. நான் காலத்தின் கலீஃபா அவர்களின் சொற்பொழிவுகள் மற்றும் இதர உரைகளைக் கேட்டேன். சுவாரஸ்யமான தாக்கம் ஏற்படுத்தக் கூடிய தகவல்களின் கருவூலத்தைப் பெற்றேன். அது எப்பொழுதும் என்னுடன் இருக்கும். மேலும் கூறுகிறார்: இந்த விஷயத்தில் அழுத்தம் கொடுக்க விரும்புகின்றேன். அதாவது, இந்த அனுபவம் என் மீது ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது.

அவர் கூறுகிறார்: அறிவின் உலகத்தில் எனக்கு ஜல்ஸா ஸாலானா எத்தகைய ஒரு தோட்டம் என்றால் அது ஒத்துழைப்பையும் சகோதரத்துவத்தையும் ஊக்குவிக்கிறது. அத்துடன் இது எப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பமாக இருந்தது என்றால் எவ்வாறு அஹ்மதிய்யா ஜமாஅத் சமூகத்திற்கு பயன் சேர்ப்பதற்காக திட்டம் வகுக்கிறது; அடிகளை எடுத்து வைக்கிறது என்று இங்கு தங்களுடைய இயக்கத்தின் முன்னுதாரணமான பணிகள் மற்றும் தொடர்ச்சியான முயற்சிகள் காட்டப்பட்டன.

எரிஸான் குஸோவாவின் மேயர் மிஸ்டர் மெஹ்மத் கூறுகிறார்: இந்த அசாதாரணமான ஜல்ஸா என்னுள் ஓர் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. நான் ஒற்றுமை, அமைதி மற்றும் சகோதரத்துவத்தின் இந்த உணர்வால் மிகவும் தாக்கம் அடைந்தேன். அது இந்த ஒன்றுகூடலின் ஒவ்வோர் அம்சத்திலும் படர்ந்திருந்தது. நிகழ்ச்சியின் போது ஆற்றப்பட்ட உரைகள் மிகவும் உன்னதமாக இருந்தன.

குறிப்பாக, காலத்தின் கலீஃபா அவர்களின் உரை எனக்கு வியப்பூட்டக்கூடியதாகவும் ஈமானுக்கு வலுவூட்டக் கூடியதாகவும் இருந்தது. இப்போது நான் இஸ்லாத்தை சரியான பொருளில் புரிந்து கொண்டேன். நான் நிர்வாகத்தின் விருந்தோம்பலையும் பாராட்டியாக வேண்டும். எல்லாரும் மிக நன்றாக விருந்தோம்பல் செய்தார்கள்.

தாஜிக்கிஸ்தானில் இருந்து வந்திருந்த ஒரு நண்பர் ஆர்ஸூ கரீம் ஸாஹிப் கூறுகிறார்: இந்த நண்பர் அரபு மற்றும் தாஜிக் மொழியில் திறமை கொண்டிருக்கிறார். இவர் ஜாமிஆ அஸ்ஹரில் கல்வி பயின்றவர். பல அரபு நூல்களைத் தாஜிக் மொழியில் மொழிபெயர்த்தும் உள்ளார். பல தாஜிக் மொழி நூல்களை இயற்றியவரும் ஆவார்.

இவர் கூறுகிறார்: நான் ஆண்டு மாநாட்டை மிகவும் உன்னிப்பாகக் கேட்டேன். மக்களைப் பார்த்தேன். இப்போது மற்ற மார்க்க ஜமாஅத்களில் முடிவுக்கு வந்து கொண்டிருக்கின்ற அதேநேரம் அஹ்மதிய்யா ஜமாஅத்திடம் காணப்படும் அந்தப் பண்புகளை எடுத்துக் கூறுவேன். அவை அஹ்மதிகளின் உயர் நல்லொழுக்கங்கள் ஆகும்.

எனவே ஒவ்வோர் அஹ்மதியும் மிகவும் உயர்வான நல்லொழுக்கத்தை வெளிப்படுத்த வேண்டும்.

நான் பல்வேறு இஸ்லாமியப் பிரிவுகளில் ஆய்வு செய்தேன். மற்ற பிரிவுகள் அனைத்தும் இப்போது இஸ்லாத்தின் படி ஒரு சதவிகிதம் செயலாற்றுகிறார்கள் என்றால் ஜமாஅத் இஸ்லாத்தின் போதனைகளின் படி 99 சதவிகிதம் அமல் செய்கிறது. ஒரு புத்தக அரங்கில் பல்வேறு மொழிகளில் இலக்கியங்களை வைத்திருப்பது உங்களுடைய தப்லீஃக் முயற்சிகளின் சான்றாகும்.

அவர் கூறுகிறார்: நான் தொடர்பு வைத்திருப்பேன். மேற்கொண்டு ஜமாஅத்தைப் பற்றி அறிய விரும்புவேன். நான் இறைவனைத் தவிர வேறு யாருக்கும் அஞ்சுவதில்லை. காலத்தின் கலீஃபா அவர்களை சந்தித்ததும் எனக்கு மிகவும் நன்றாக இருந்தது. நான் காலத்தின் கலீஃபா அவர்கள் கூறிய இந்த விஷயத்தில் அவர்களுடன் ஒத்துப்போகிறேன். அதாவது, அசல் பலவீனம் மக்களான நம்மிடம் உள்ளது. நாம் எந்நேரமும் அரசாங்கத்தையும் ஆட்சியையும் குறைக் கூறிக் கொண்டே இருக்கிறோம்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும்
என்னை வணங்குவதற்காகவே
படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில்
குறைவாகவே
துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

அவர் கூறுகிறார்: மீண்டும் சந்திப்பு ஏற்பட வேண்டும் ; நான் பயனடைய வேண்டும் என்று நான் நம்பிக்கை வைக்கின்றேன்.

தாஜிக்கிஸ்தானின் குழுவில் இணைந்திருந்த ஜமாஅத் அல்லாத ஒரு தாஜிக் நண்பர் கூறினார்: காலத்தின் கலீஃபா அவர்களுடனான சந்திப்பில் தாஜிகிஸ்தானின் அரசியல் விவகாரங்கள் மற்றும் மார்க்கக் கட்டுப்பாடுகள் குறித்து திருப்திகரமான உரையாடல் நடைபெற்றது. முழு மனித குலத்தைப் பற்றியும் அவர்களுக்கு மிகவும் கவலை இருக்கிறது என்ற விஷயம் எனக்கு மிகவும் நன்றாக இருந்தது.

அவர் கூறுகிறார்: வருவதற்கு முன்பு எனக்கு அஹ்மதிய்யா ஜமாஅத் பற்றி எதிர்மறையான செய்திகள் தெரிவிக்கப்பட்டன. ஆனால், எனக்குத் தங்களுடைய ஜமாஅத்திடமிருந்து சகோதரத்துவம் மற்றும் மனிதத்தின் பாடத்தைக் கற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது.

தாஜிகிஸ்தானின் முபல்லிஃக் எழுதுகிறார்கள்: தாஜிகிஸ்தானின் குழுவில் ஒரு நண்பர் இருந்தார். அவர் மிகவும் ஆட்சேபனை செய்யும் இயல்புடையவராக இருந்தார். ஜல்ஸாவின் முதல் இரண்டு நாட்கள் ஆட்சேபனையே செய்து கொண்டிருந்தார். ஓர் ஆட்சேபனை செய்வார். பதிலுக்கு முன்னாலேயே அடுத்த ஆட்சேபனையை செய்து விடுவார். நாம் பார்க்கவும் வேண்டும்; வெறுமனே ஆட்சேபனையே செய்து கொண்டிருக்கின்றீர்கள் என்று அவரிடம் அவருடைய தோழர்கள் கூறினார்கள்:

எவ்வாறு இருப்பினும் ஜல்ஸாவின் இரண்டாவது நாள் குழுக்களுக்கு என்னுடன் சந்திப்பு இருந்தது. அவரும் சந்தித்தார். நான் ஆரம்பத்தில் அவரிடமிருந்தே பேச ஆரம்பித்தேன். அவரைப் பற்றி அறிமுகம் செய்யச் சொன்னேன். முகக் கவசம் அணிந்திருந்தார். நான் அவிழ்த்து விடுங்கள்; சற்று முகத்தைக் காட்டுங்கள் என்று கூறினேன்.

அவருடன் மிகவும் விளக்கமாக உரையாடல் நடைபெற்றது. எவ்வாறு இருப்பினும், முரப்பி ஸாஹிப் கூறுகிறார்கள்: காலத்தின் கலீஃபா அவர்களை நான் சந்தித்து விட்டேன் என்று சந்திப்பிற்குப் பிறகு அவர் பெரும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். பின்னர் , எனக்கு துஆ சொற்களும் வழங்கிக் கொண்டிருந்தார்.

முரப்பி ஸாஹிப் கூறுகின்றார்கள்: ஆனால், விநோதமான விஷயம் அதற்குப் பிறகு இரண்டு நாட்கள் அவர் எந்த ஆட்சேபனையும் செய்யவில்லை. அல்லாஹ்வின் அருளினால் அவருடைய உள்ளம் எப்படித் தெளிவானது என்றால் ஆட்சேபனைகள் முடிந்து விட்டன.

ஜல்ஸா ஸாலானாவில் கலந்து கொண்ட அரபு சகோதரர்கள் சிலருடைய நற்தாக்கங்கள் உள்ளன. சிரியாவைச் சேர்ந்த ஒரு விருந்தினர் முஹம்மத் அலீ ஸாஹிப் ஆவார்.

அவர் கூறுகிறார்: என் நண்பர் ஒருவர் மூலமாக எனக்கு அஹ்மதிய்யத் அறிமுகமானது. என் நண்பர் என்னை ஆண்டு மாநாட்டுக்கு அழைத்து வந்தார். பகலைக் கழித்து விட்டு இரவு வீட்டுக்குச் சென்று விடலாம் என்று எண்ணியிருந்தேன். வீடு அருகில் தான் உள்ளது. ஏனெனில், இங்கு இடம் ஒய்வளிப்பதாக இருக்கவில்லை. நான் சுற்றுச் சூழலையும் அமைப்பையும் பார்த்தேன். ஒவ்வொருவரும் புன்சிரித்தார். மிக நல்ல சூழல் ஆகும். ஒருவர் மற்றவரை அறிந்தவர்கள் போன்று இருந்தார்கள். அவர் கூறுகிறார்: இதுபோன்ற சூழலை நான் என் வாழ்நாளில் ஒருபோதும் கண்டதில்லை. நான் என் எண்ணத்தை மாற்றிக் கொண்டேன். நான் இங்கு மாநாட்டில் தரையிலேயே உறங்கி விடுகிறேன். சிரமம் எதுவும் இல்லை. கீழே கம்பளம் விரிக்கப்பட்டுள்ளது என்று நினைத்தேன்.

அவர் கூறுகிறார். ஜல்ஸாவின் இரண்டாவது நாளிலேயே அஹ்மதிய்யத்தின் உண்மைத்துவம் எனது உள்ளத்தில் குடி கொண்டு விட்டது. நான் பைஅத் செய்ய எண்ணம் கொண்டு விட்டேன். அல்லாஹ் எனக்கு அதற்கான நல்வாய்ப்பு வழங்கினான்.

அவர் கூறுகிறார்: நான் அஹ்மதிகள் அமைப்புக் கட்டுப்படுவது, ஒருங்கமைப்பைக் கருத்தில் கொள்வது, சிதறிப் போகாமல் இருப்பது ஆகியவற்றால் மிகவும் தாக்கத்திற்கு உள்ளானேன். நிர்வாகியாகட்டும்; விருந்தினராகட்டும்; ஒவ்வொருவரும் தன்னுடைய கடமைகளை அறிகிறார்.

அப்துர் ரஹ்மான் இஸ்மாயீல் ஸாஹிப் எழுதுகிறார்: ஜல்ஸாவில் முதல் முறை கலந்து கொண்டேன். உலகம் முழுவதும் இப்படி பணிபுரிகின்ற இத்தகைய ஒரு கூட்டம் இல்லை. வருகை தந்தவர்கள் முழு உலகிலிருந்தும் கலந்து கொண்டிருந்தார்கள். ஆனால், எந்த வகையான சண்டை சச்சரவையும் பார்க்கவில்லை. ஒருவர் மற்றவருடன் அன்பு, நேசம் மற்றும் சகோதரத்துத்தின் உயர் முன்மாதிரிகளைப் பார்த்தேன்.

அவர் கூறுகிறார்: எதிர்பார்த்ததை விட அதிக எண்ணிக்கையில் கலந்து கொண்டிருந்தனர். எனக்கு அதிகம் பயன்பெறுவதற்கான நல்வாய்ப்பு கிடைத்தது.

அப்துல்லாஹ் இஸ்ஸத் அகீல்வீ ஸாஹிப் எகிப்தைச் சேர்ந்தவர் ஆவார். Physics இல் முதுகலைக் கல்வி பயில்கிறார். இன்றைய நாட்களில் ஃபிரான்ஸில் இருக்கின்றார். அவர் கூறுகிறார்: Physics இல் ஒவ்வொன்றும் சந்தேகக் கண்ணோட்டத்தில் பார்க்கப்படுகின்றது. எனவே ஒவ்வொரு விஷயத்திலும் சந்தேகப்படுவது எனது இயல்பின் அங்கமாகி விட்டது. நான் வெகு காலம் முன்பே பைஅத் செய்திருந்தேன். ஜமாஅத் மற்றும் கிலாஃபத்துடன் தொடர்பும் இருந்தது. ஆனால், சிறிதுசிறிதாக மற்ற விவகாரங்கள் மட்டுமின்றி ஜமாஅத் பற்றியும் சந்தேகங்கள் உருவாகி விட்டன. நான் ஜமாஅத்தை விட்டு விலக ஆரம்பித்து விட்டேன்.

அவர் கூறுகிறார்: இவ்வாண்டு ஜெர்மனி ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வந்தேன். ரிஜிஸ்ட்ரேஷனில் சற்று தாமதமாகி விட்டது. குறித்த நேரத்தில் ரிஜிஸ்ட்ரேஷன் நடைபெறவில்லை.

மக்கள் மிகவும் சிரமத்தை எதிர் கொண்டார்கள் என்பதே ரிஜிஸ்ட்ரேஷன் தொடர்பான முறையீடாக இருந்தது. ஆனால், இவருக்கு இந்த கால தாமதம் அதாவது தாமதமானது பயனளித்து விட்டது. அது எப்படி என்றால் அவர் கூறுகிறார்: நான் சென்றடைந்த போது குத்பா ஆரம்பித்து விட்டிருந்தது. நான் மாநாட்டுத் திடலுக்குள் நுழைந்த போது குத்பாவின் எந்தச் சொற்கள் என்னுடைய காதுகளில் விழுந்தனவோ அவை இவையாகும்; மனிதன் ஒவ்வொரு விஷயத்திலும் தப்பெண்ணம் கொள்ள ஆரம்பித்து விட்டால், ஒரு நொடிப் பொழுதும் உலகில் கழிக்க முடியாமல் போகலாம்.

இது நான் வாசித்துக் கொண்டிருந்த ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்கோளாகும். விஷம் கலந்திருக்கலாம் என்று சந்தேகித்தால் மனிதன் தண்ணீர் கூட அருந்த முடியாமல் போகலாம் . சந்தையின் எந்தப் பொருளையும் அவற்றில் அழித்து விடக் கூடிய எதுவும் இருக்குமோ என்று எண்ணினால் உண்ண முடியாமல் போகலாம். பிறகு அவரால் எப்படி உயிர் வாழ முடியும்?

அவர் கூறுகின்றார்: இந்தச் சொற்களை கேட்டதும் நான் உள்ளுக்குள்ளேயே அதிர்ந்து போனேன். நான் இப்பொழுது மாநாட்டுத் திடலுக்கு வந்தது இறை நியதி போன்று இருந்தது. ஏனெனில், முதல் வாக்கியமே எனது நோய்க்கு சிகிச்சையாக இருந்தது. என்னைப் பார்த்துக் கூறுவது போன்று இருந்தது. அவர் கூறுகிறார்: இது ஒன்றும் தற்செயலான விஷயமாக இருக்க முடியாது. அது என் உள்ளத்தில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. இறையருளால் சந்தேகங்களும் தப்பெண்ணங்களும் முடிவுக்கு வந்து விட்டன. அல்ஹம்துலில்லாஹ். இறைவன் ஜல்ஸாவில் கலந்து கொண்டதன் மூலமாக எனக்கு சந்தேகங்கள் மற்றும் தப்பெண்ணங்களில் இருந்து விடுதலையளித்தான். இந்த சம்பவத்தை அவர் எனக்கு சுயமாகவும் கூறினார்.

கேம்ரூனில் இருந்து இமாம் ஸாஹிப் வந்திருந்தார். அங்கு இவர் கேம்ரூனின் தவாலா எனும் நகரத்தின் பெரிய இமாம் ஆவார். சீஃப் இமாம் ஆவார். மேலும், இரண்டு மண்டலத்தின் அறிஞர்களின் கவுன்ஸிலின் சேர்மனும் ஆவார். ஜமாஅத் அல்லாத நபர் ஆவார்.

அவர் கூறுகின்றார்: இவ்வளவு பெரிய நிகழ்ச்சியில் முதல் முறை கலந்து கொண்டேன். எனக்கு மிகவும் வியப்பூட்டக் கூடிய விஷயம் என்னவென்றால், ஜல்ஸா ஸாலானாவில் பல்வேறு நிறங்களை உடைய மக்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் சந்தித்தார்கள். ஒரு குடும்ப உறுப்பினர்கள் போன்று ஒருவர் மற்றவரை அன்பு நேசத்துடன் சந்தித்துக் கொண்டார்கள். மூன்று நாள்களில் எனக்கு எந்தவிதமான ஒரு சண்டையும் தென்படுவதில்லை.

அடுத்து கூறுகிறார்: கண்காட்சிகளுக்கு சென்று அறிவில் அதிகம் விருத்தி ஏற்பட்டது. நான் ஜமாஅத்தின் தொண்டுகளால் மிகவும் தாக்கத்திற்கு உள்ளானேன். பிறகு, கூறுகிறார்: ஜமாஅத்தின் இமாம் அவர்களின் சொற்பொழிவுகள் மிகவும் நுட்பமானவையாக இருந்தன. இஸ்லாமிய போதனைகளை சிறப்பாக பிரதிபலித்துக் கொண்டிருந்தன. பெண்களுடனான உரை என்னை மிகவும் தாக்கத்திற்கு உள்ளாக்கியது. நாம் அனைவரும் இந்தப் பொன்னான வழிகாட்டல்களின்படி வாழ்வைக் கழிக்க ஆரம்பித்து விட்டால் இந்த வாழ்வு சொர்க்கமாகி விடும்.

பிறகு கூறுகிறார்: ஜல்ஸாவின்போது ஜமாஅத்தின் இமாம் அவர்கள் ஜமாஅத் அல்லாத மக்களுக்கு நிகழ்த்திய உரை இஸ்லாமிய போதனைகளால்

நிறைந்திருந்தது. ஜமாஅத்தின் இமாம் அவர்கள் எத்தகைய போதனையை முன் வைத்தார்கள் என்றால் ஒவ்வொரு முஸ்லிமும் தன் மார்க்கத்தின் மீது பெருமைப்பட வேண்டும். நாம் அனைவரும் செயல் ரீதியாக இந்தப் போதனையை முழு உலகத்திற்கு முன்னால் எடுத்து வைக்க வேண்டும்.

இப்பொழுது அல்லாஹ் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கலீஃபா அவர்களை சிறப்பான இஸ்லாமிய போதனைகளை உலகிற்கு முன்னால் எடுத்து வைப்பதற்காக நிறுத்தியுள்ளான். மேலும், கூறுகிறார்: மற்ற சொற்பொழிவுகள் மூலமாகவும் (அதாவது) மற்ற அறிஞர்களின் சொற்பொழிவுகள் மூலமாகவும் எனது அறிவில் அதிகம் விருத்தி ஏற்பட்டது.

பிறகு செக் குடியரசில் இருந்து இம்முறை முதல் முறையாக பணி ஓய்வு பெற்ற ஒரு பேராசிரியர் டேனியல் ஸாஹிப் கலந்து கொண்டார். அவர் கூறுகிறார்: (இது) எனக்கு ஜல்ஸா ஸாலானாவின் முதல் அனுபவமாகும். பல விஷயங்கள் என்னைத் தாக்கத்திற்கு உள்ளாக்கின. ஒன்று, தொழுகையின் போது நான் பார்த்தேன். காலத்தின் கலீஃபா அவர்களுடன் ஜமாஅத் மக்கள் எந்தத் தொணியில் தொழுதார்கள் என்றால், காலத்தின் கலீஃபா அவர்கள் மூச்சு வாங்குவதோடு சேர்ந்து அவர்கள் மூச்சு வாங்குவது போன்றும் அவர்கள் ஓர் இருப்பாக ஆகிவிட்டதாகவும் உணர்ந்தேன். நான் உலகில் பல சமுதாயங்கள், சமயங்கள் மற்றும் மக்களைப் பார்த்துள்ளேன். இதுபோன்ற ஒருமைப்பாடு மற்றும் ஒற்றுமை இன்று முதல் முறையாகக் காணக் கிடைத்தது. அதைப் பார்த்து உள்ளம் மிகவும் மகிழ்ச்சி அடைந்தது.

பிறகு மேற்கொண்டு கூறுகின்றார்: உலகில் பெரும் பெரும் கண்காட்சிகளுக்கும் செல்வதற்கான வாய்ப்பு கிடைத்தது. அங்கு எங்கெல்லாம் பாதுகாப்புப் பணியாளர்களைப் பார்த்தேனோ அங்கு பாதுகாப்புப் பணியாளர்களின் தோரணை கசப்பாக இருப்பதையே காணப் பெற்றேன். ஆனால், இந்த ஜல்ஸா ஸாலானாவில் பாதுகாப்புப் பணியாளர்களில் இருந்து ஒவ்வொரு பணியாளருடைய முகத்திலும் புன்சிரிப்பைக் கண்டேன். அதனால் நிச்சயமாக முழு ஜல்ஸாவின் சூழலின் மீது நேர்மறையான தாக்கம் ஏற்பட்டது. ஓர் அமைதி நிறைந்த சூழல் உருவாகியிருந்தது. இவ்வளவு பெரிய மக்கள் கூட்டத்தில் எந்தத் தங்கு தடையுமின்றி நடப்பது நிச்சயமாக வியப்பூட்டக் கூடியதாகும்.

சில அஹ்மதிகள் பாதுகாப்புப் பணியாளர்களை குறை கூறியுள்ளார்கள்; ஆனால், நல்லவேளை அந்நியர்களுக்குப் பாதுகாப்புப் பணியாளர்களின் தோரணை பிடித்திருந்தது. பொதுவாக ஒன்றிரண்டு பேர் இருக்கலாம். யாராவது காட்டியிருக்கலாம் அல்லது சிலவேளை சில பகுதிகளில் கட்டுப்பாடு விதித்திருக்கலாம். ஆனால், பொதுவாக பாதுகாப்புப் பணியாளர்களும் நன்றாகப் பணியாற்றுபவர்களாக இருந்தார்கள். பிறகு, என்னை சந்தித்ததைப் பற்றி எடுத்துரைத்தவாறு கூறுகிறார்: முதலில் அவர் பார்த்தார். மிகவும் தாக்கத்திற்கு உள்ளானார். அவர் கூறுகிறார்: மிகவும் நன்றி செலுத்துகிறேன். இந்த சந்திப்பும் என் வாழ்வின் ஒரு பொன்னான பகுதியாகும். நான் உரையாடலால் மிகவும் பலன் பெற்றேன். பிறகு கூறுகிறார்: செக் குடியரசில் இருந்து வந்திருந்த இன்னொரு நபர் ஓர் இளைஞர் விருந்தினர். அவர் கூறுகிறார்: எனக்கு இந்த ஆண்டு மாநாட்டில் அஹ்மதிகள் மூலமாக இறைவன் தென்பட்டான். பல மக்கள் இறைவனைப் பற்றி தெரிந்து கொள்வதற்கு முயற்சி செய்கிறார்கள். ஆனால், இந்த மாநாட்டில் மக்களின் மௌனமான நல்லொழுக்கங்களைப் பார்த்து எனக்கு உங்கள் ஜமாஅத்தில் இறையிருப்பு தென்பட்டது.

இதுவும் ஒரு மௌனமான தப்லீஃக் ஆகும்.

லித்வானியா பல்கலைக் கழகத்தின் ஓர் அரபி பேராசிரியர் கின்தாரே சேரே காயித்தே என்ற பெண்மணி. இவர் ஜல்ஸாவில் கலந்து கொண்டார். இவர் தன்னாவர்வத் தொண்டாக இஸ்லாமீ உஸூல் கீ ஃபிலாஸஃபீ இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம் நூலை வித்வேனியின் மொழியில் மொழி பெயர்க்கவும் செய்தார்.

அந்தப் பெண்மணி கூறுகிறார்: இஸ்லாமிய உலகில் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு ஒரு தனிச் சிறப்பான இடமும் உள்ளது. அஹ்மதிய்யா ஜமாஅத் எவ்வாறு ஜமாஅத் அல்லாத மற்றும் முஸ்லிம் அல்லாத மக்களுடன் தொடர்பு வைத்துள்ளதோ வேறு எந்த ஜமாஅத்தும் அவ்வாறு செய்ததில்லை.

ஓர் ஆராய்ச்சியாளர் என்கிற வகையில் இஸ்லாமிய கலாச்சாரம் மற்றும் இஸ்லாமிய வழக்கங்களில் பெரும் ஈடுபாடு உள்ளது. ஆனால், லித்வானியாவில் அஹ்மதிய்யா ஜமாஅத்தைத் தவிர எந்தவோர் இஸ்லாமிய பிரிவையும் சந்திப்பதும் தொடர்பு வைத்துக் கொள்வதும் மிகவும் சிரமமாகும். நான் அஹ்மதிய்யா ஜமாஅத்தை எல்லா விதத்திலும் சோதித்து அறிவதற்கு ஆண்டு மாநாடு எனக்கு நல்லதொரு சந்தர்ப்பத்தை வழங்கியது. நிச்சயமாக அஹ்மதிய்யா ஜமாஅத் எல்லாரிடத்தும் அன்பு எவரிடத்தும் இல்லை வெறுப்பு எனும் தனது குறிக்கோள்படி உண்மையான வடிவில் அமல் செய்கிறது. இங்கு நான் 47 ஆயிரம் மக்களில் எந்த அந்நியத் தன்மையையும் உணரவில்லை.

பிறகு லித்வானியாவில் இருந்து ஓர் எழுத்தாளரும், நிருபரும் ஆன ஜெரூனீ மாஸ் ஸாஹிப் கூறுகிறார்: நான் உலகில் இருக்கும் அமைதியின்மை மற்றும் அளவற்ற ஏழ்மையினால் மிகவும் கவலையாக உள்ளேன். இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஒரு சாதாரண மனிதனால் என்ன செய்ய முடியும்? என்று எப்பொழுதும் யோசிப்பேன். ஆனால், இதே கேள்வியை நான் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களிடம் கேட்டபோது எனக்கு மிகவும் திருப்தியளிக்கக் கூடிய இந்த பதில் கிடைத்தது.

மனிதனின் நோக்கமோ திருக்குர்ஆன் எடுத்துக் கூறியுள்ள அதே விஷயம் தான். அதாவது, மனிதன் படைக்கப்பட்டதன் நோக்கம் அல்லாஹ்வை வணங்க வேண்டும் என்பதாகும். மரணத்திற்குப் பிறகும் ஒரு வாழ்வு இருக்கின்றது என்ற விஷயத்தை மக்கள் நினைவிற் கொள்ள வேண்டும். மக்கள் இதன் பக்கம் கவனம் செலுத்தவில்லை என்றால் உலகில் எப்பொழுதும் அமைதியின்மை இருக்கும். காலத்தின் கலீஃபா அவர்களின் கவனம் முன்னரே இந்த விவகாரத்தின் பக்கம் உள்ளது என்பதையும், அவர்கள் மக்களுக்குத் தம்முடைய சொற்பொழிவுகள் மற்றும் குத்பாக்களில் உலகின் விவகாரங்களுக்குத் தீர்வும் கூறுகிறார்கள் என்பதையும் அறிந்து நான் மிக்க மகிழ்ச்சி அடைந்தேன்.

பிறகு, கீர்கீஸ்தானில் இருந்து காசீயே ஸாஹிப் வந்திருந்தார். அவர் கூறுகிறார்: ஜல்ஸாவின் போது நான் எனது மார்க்கத்தைப் பற்றியும் ஜமாஅத்தைப் பற்றியும் பல விஷயங்களைக் கற்றுக் கொண்டேன். எனக்கு என்னுடைய பல கேள்விகளுக்கு பதில் கிடைத்து விட்டது. நான் என் வாழ்நாளில் முதல் முறையாக ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டுள்ளேன். முதல் முறையே வெளிநாட்டிற்குப் புறப்பட்டுள்ளேன். ஜல்ஸாவின் போது இவ்வளவு பெரிய மக்கள் திரள் இருக்கும் என்று நான் கணித்திருக்கவில்லை. நான் அங்கு பேசப்பட்ட எல்லா விஷயங்களையும் கேட்டேன். எனக்கு மிகவும் மனம் கவரக்கூடியதாக இருந்தது. மேலும் எல்லாம் சிறப்பானதாக இருந்தது.

கஸாகிஸ்தானில் இருந்து வந்திருந்த ஓர் அஹ்மதி நண்பர் அலீ பேக் ஸாஹிப் கூறுகிறார்: ஜல்ஸாவில் கலந்து கொண்டது மிகவும் நன்றாக இருந்தது. பைஅத் செய்தபோது ஒரு தனி உணர்வு இருந்தது. காலத்தின் கலீஃபா அவர்களை சந்தித்தபோது என்னுடைய அனைத்து உணர்ச்சிகள் மற்றும் உணர்வுகள் தம்முடைய இறுதி கட்டத்தை அடைந்து விட்டன. நான் ஜல்ஸாவில் வந்த நோக்கம் நிறைவேறி விட்டது.

ஜல்ஸாவில் கலந்து கொண்டதன் தாக்கம் எந்த அளவு அதிகமாக இருக்கிறது என்றால், என் மனைவி மக்களும் நீங்கள் மாறி விட்டீர்கள் என்று கூறினார்கள். அடுத்த ஆண்டு மனைவி மக்களுடன் ஜல்ஸாவில் கலந்து கொள்தவற்கான எண்ணம் இருக்கிறது. இன்ஷாஅல்லாஹ்.

யாஸ்மீன் ஸாஹிபா ஒரு துருக்கி பெண்மணி ஆவார். தொழில் அடிப்படையில் ஓர் ஆசிரியர் ஆவார். ஜெர்மனி நகரத்திலேயே வசிக்கின்றார். இங்கு ஜெர்மனியில் வசிக்கின்றார். அவர் கலந்து கொண்டார். அவர் கூறுகிறார்: காலத்தின் கலீஃபா அவர்களின் சொற்பொழிவு என்னுடைய கேள்விகளுக்கு பதிலாக இருந்தது. ஜல்ஸாவின் சூழல் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. இவ்வளவு பெரிய மக்கள் திரள் இவ்வளவு அதிகம் அமைதி மற்றும் நிம்மதியுடன் ஒவ்வொரு பணியும் நடைபெற்றது எனக்கு மன நிம்மதியை அளித்துக் கொண்டே இருந்தது.

இவ்வளவு அதிகமான மக்கள் அல்லாஹ்வின் தன்னிறைவைப் பெறுவதற்காக மட்டுமே ஒன்று கூடுவது;. பிறகு அவர்கள் எல்லாரும் அன்பின் சரடில் கோர்க்கப்பட்டுள்ளது; ஓர் அசாதாரணமான வியக்க வைக்கும் விஷயமாக இருந்தது. அவர் கூறுகிறார்;

சுருக்கமாக கூற வேண்டும் என்றால், அங்கு என்னவெல்லாம் கூறப்பட்டதோ எந்த சிந்தனை வெளிப்படுத்தப்பட்டதோ நான் அதைத் தான் தேடிக் கொண்டிருந்தேன். அன்று நான் ஒரு புதிரின் ஒவ்வொரு பகுதியையும் தத்தமது இடத்தில் பொருத்தமாக அமையக் கண்டேன்.

செர்பியாவில் இருந்து வந்திருந்த ஒரு பத்திரிகையாளர் ஸதானீஸ் ஸாஹிப் தம்முடைய கருத்துகளைத் தெரிவித்திருக்கின்றார். ஓர் ஆர்த்தடாக்ஸ் கிறிஸ்தவனாக இருந்தும் உங்களுக்கு எதிராக இணையதளத்தில் அதிகம் வெறுப்பு பரவியிருந்தும் நான் உங்கள் ஜமாஅத்தால் மிகவும் தாக்கத்திற்கு உள்ளானேன்.

உங்கள் நிர்வாகம் மற்றும் அமைப்பு என்னை வியக்க வைத்து விட்டது. நாம் அஹ்மதிய்யத்தின் உண்மையான போதனையை உலகில் விசாலமான முறையில் பரப்ப முடியாது என்று நான் மிகவும் கவலை தோய்ந்துள்ளேன். நாங்கள், எல்லாரிடத்தும் அன்பு; எவரிடத்தும் இல்லை வெறுப்பு எனும் குறிக்கோளை ஒவ்வோர் அடியிலும் பார்வையிட்டோம்.

எங்களுக்கு நிர்வாகத்திலோ 46 ஆயிரம் மக்களிலோ எந்தத் தவறான விஷயமும் தென்படவில்லை. எல்லா இடத்திலும் அமைதி இருந்தது. உங்கள் போதனைப்படி ஒவ்வொருவரும் மற்றவருக்கு கண்ணியமளித்தார். அவர் கூறுகிறார்: எனக்கு அதை சொற்களில் விவரிப்பது கஷ்டமாகும்.

செர்பியாவில் இருந்து வந்திருந்த ஒரு பத்திரிகையாளர் ஸதானீஸ் ஸாஹிப் தம்முடைய கருத்துகளைத் தெரிவிக்கின்றார். ஓர் ஆர்த்தடாக்ஸ் கிறிஸ்துவராக இருந்தும், உங்களுக்கு எதிராக இணைய தளத்தில் அதிகம் வெறுப்பு பரவியிருந்தும் நான் உங்கள் ஜமாஅத்தால் மிகவும் தாக்கத்திற்கு உள்ளானேன். உங்கள் நிர்வாகம் மற்றும் அமைப்பு என்னை வியக்க வைத்து விட்டது.

செர்பியாவில் இருந்து வந்திருந்த ஒரு பெண் பத்திரிகையாளர் நியா ஸாஹிபா கூறுகின்றார்: எனது உள்ளத்தில் ஜல்ஸா ஸாலானாவின் நிர்வாகம் சொற்பொழிவாளர்கள் மற்றும் கலந்து கொண்ட அனைவர் தொடர்பாகவும் மிகவும் நேர்மறையான தாக்கங்கள் உள்ளன. எல்லாவற்றையும் விட அதிகமாக நான் கலீஃபா அவர்கள் லஜ்னாவின் பக்கம் ஆற்றிய உரையால் தாக்கத்திற்கு உள்ளானேன். இவ்வாறே நான் முழு நிர்வாகத்திற்கும் மிகவும் அதிகமாக நன்றி செலுத்துகிறேன்.

பிறகு, ஓர் உள்ளூர் போலிஷ் அஹ்மதி பெண்மணி கூறுகிறார்: மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ஒரு கனவில் பார்த்தேன்.

அதாவது, நான் ஒரு சந்திப்பில் இருப்பதாகவும் அவர் என்னிடம் ஏதோ கேள்வி கேட்க விரும்புவதாகவும் பார்த்தார்.

அவர் கூறுகிறார்: ஆனால், எனக்கு கேள்வி கேட்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அதனால் நான் மிகவும் கவலையடைந்தேன். எனது கேள்வி மிகவும் முக்கியமானதாக இருந்தது.

அவர் கூறுகிறார்: ஆனால், ஜெர்மனி ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டேன். சந்திப்பிற்கான சந்தர்ப்பம் கிடைத்ததும் எனக்கு அந்தக் கேள்வியைக் கேட்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்து விட்டது. மேலும், காலத்தின் கலீஃபா அவர்கள் தரப்பிலிருந்து மிகவும் திருப்தி அளிக்கக் கூடிய பதிலும் எனக்குக் கிடைத்து விட்டது. இதற்குப் பிறகு எனக்கு ஒரு விநோதமான நிம்மதி கிடைத்தது. நான் மிகவும் நன்றி செலுத்திக் கொள்கிறேன்.

ஒரு ஜெர்மனி விருந்தினர் கூன்தா ஸாஹிப் கூறினார்: நான் இஸ்லாமிய மார்க்கத்தை விமர்சனக் கண்ணோட்டத்துடன் பார்க்கிறேன். ஆயினும், நான் கலீஃபா அவர்களின் சொற்பொழிவை மிகவும் கவனமாக செவிமடுத்தேன். எதுவரை என்றால், கலீஃபா அவர்கள் எந்த ஆதாரங்களைத் தம்முடைய சொற்பொழிவில் எடுத்துக் கூறினார்களோ நான் அவற்றையும் சரிபார்த்தேன்.

இவ்வளவு ஆழமாக சில மக்கள் பார்க்கிறார்கள். நான் குறிப்பிட்டிருந்த திருக்குர்ஆன் வசனங்கள் தவறு ஒன்றும் இல்லையே. வெறும் பகட்டுக்காக இல்லையே! என சென்று திருக்குர்ஆனில் சரிபார்த்தார். அவர் கூறுகிறார்: இந்த விஷயத்தை நான் ஒப்புக் கொள்ளும் நிர்பந்தத்தில் உள்ளேன். அதாவது, கலீஃபா அவர்கள் அமைதி மற்றும் சகோதரத்துவத்தில் இந்த அளவுக்கு அழுத்தம் கொடுத்துள்ளார்களே! என்று கலீஃபா அவர்களின் சொற்பொழிவைக் கேட்டு எனக்கு மிகவும் வியப்பு ஏற்பட்டது.

ஐயமின்றி கலீஃபா அவர்கள் மிக நல்ல சொற்பொழிவு ஆற்றினார்கள். எனது வியப்பை நீங்கள் ஊகித்துப் பார்க்க முடியாது என்று நான் மீண்டும், மீண்டும் கூறும் நிர்பந்தத்திற்கு ஆளாகியுள்ளேன். அதாவது, அவர்கள் இஸ்லாத்தின் அமைதி நிறைந்த ஒரு தோற்றத்தை காண்பித்துள்ளார்கள். அது பொதுவாக இங்கு தென்படுவதில்லை.

இன்று நிச்சயமாக இஸ்லாத்தைப் பற்றிய எனது கண்ணோட்டம் பெரிதும் அதிகரிக்கின்றது. ஏனெனில், இதற்கு முன்னால் என்னால் இஸ்லாத்தை அமைதி நிறைந்த மார்க்கமாகக் கூட கற்பனை செய்ய முடியாமல் இருந்தது. இஸ்லாத்தின் அமைதி குறித்த போதனைகளைப் பற்றி எனக்குத் தெரியாமல் இருந்தது.

நான் இன்று முதல் முறையாக கலீஃபா அவர்கள் லஜ்னாவுடன் நிகழ்த்தும் உரையை ஆண்களின் ஹாலின் திரையில் கண்டேன். இவர்கள் கலீஃபா ஆவார்கள் என்பது எனக்குத் தெரியாமல் இருந்தது. ஆனால், அந்த உரையைக் கேட்டும் மிகவும் தாக்கத்திற்கு உள்ளானேன்.. விருந்தினர்கள் மேடைக்கு வந்தபோது எனக்குத் தெரிய வந்தது. நான் அவர்கள் உரையாடுவதை நேரடியாகக் கேட்பேன் என்று எனக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டது.

ஒரு ஜெர்மனி விருந்தினர் க்யூவன் ஸாஹிப் கூறுகிறார்: நானோ கலீஃபா அவர்களின் சொற்பொழிவைக் கேட்டு வியந்து போனேன். என்ன சொல்வது? என்னிடம் சொற்கள் இல்லை. ஆனால், கலீஃபா அவர்கள் எடுத்துரைத்த விஷயங்களின்படி ஒவ்வொருவரும் அமல் செய்ய வேண்டும் என்பதை நான் அறிவேன். மேலும், கலீஃபா அவர்கள் புன்சிரிப்பைப் பற்றி எந்த விஷயத்தைக் கூறினார்களோ அது மிகவும் அவசியம் ஆகும்.

அதன் குறை ஜெர்மனியில் அதிகம் உள்ளது. நாம் புன்சிரித்துக் கொண்டே இருக்க வேண்டும். அது நம்மிடம் இல்லை என்று சுயமே தம்முடைய விஷயங்களைக் கூறுகிறார். (அதனால்) நம் மக்கள் தாக்கத்திற்கு உள்ளாகிறார்கள். பெண்களின் அந்தஸ்து குறித்த தங்களது வழிகாட்டல்களுடன் முழுவதுமாக நான் ஒத்துப்போகிறேன். கலீஃபா அவர்கள் கூறிய அனைத்தும் உண்மை என்று கருதுகிறேன்.

ஒரு ஜெர்மனி விருந்தினர் கிறிஸ்டியானா கிறிஸ்டின் ஒரு கத்தோலிய டீவியின் பிரதிநிதி ஆவார்.

அவர் கூறுகிறார்: கலீஃபா அவர்களின் சொற்பொழிவு மிகவும் தாக்கம் ஏற்படுத்தக் கூடியதாக இருந்தது. கேட்போரின் (வட்டத்தின்) விரிவாக்கத்துக்கு ஏற்ப சொற்பொழிவின் வட்டத்தை வடிவமைத்தார்கள்.

கலீஃபா அவர்கள் அடிப்படை விதிகளை எடுத்துரைத்ததுடன் சேர்த்து, இந்த அடிப்படை விதிகளையும் இறைவன் கற்றுக் கொடுத்ததுதானே அன்றி, இன்றைய ஐக்கிய நாடுகள் சபையோ அல்லது வேறு யாரோ உருவாக்கியவை அல்ல என்பதையும் தெளிவுபடுத்தி விட்டார்கள். இந்தத் தோரணையில் மற்ற மார்க்கத் தலைவர்களும் இந்த விளக்கத்துடன் தம்முடைய உரையை நிகழ்த்த வேண்டும் என்று நான் கருதுகிறேன்.

அவர் கலீஃபா அவர்களின் சொற்பொழிவு எப்படி இருந்தது என்றால் நான் கேட்டுவிடுவது மட்டும் போதுமானதல்ல. அதையும் தாண்டி அதில் மிகவும் ஆழ்ந்து கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில், அவர்கள் எடுத்துரைத்த விஷயங்களின் பொருள் என்ன? (என்று பார்க்க வேண்டும்). நான் இஸ்லாத்தின் உண்மையான போதனைகளைப் பற்றி மிகவும் ஆய்வு செய்தேன். இஸ்லாத்தைப் பற்றி எனது கண்ணோட்டம் மிகவும் நல்லதாகும்.

கலீஃபா அவர்கள் இஸ்லாத்தின் பெண்கள் பற்றிய எந்தப் போதனைகளை எடுத்துரைத்தார்களோ அவை மிகவும் சுவாரஸ்யமானவையாகும். ஆனால், எனது கருத்து என்னவென்றால், இந்த உரிமைகளையும் அந்தஸ்தையும் எந்த ஒரு என், ஜி.ஓவோ அல்லது சட்டமன்றமோ உருவாக்கவில்லை. மாறாக, இறைவன் மார்க்கத்தின் மூலமாக உருவாக்கியுள்ளான் என்பதை மக்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

ஒரு ஜெர்மனி விருந்தினர் வுலியான் ஸாஹிப் கூறுகிறார்: நாம் மிகவும் திறந்த மனப்பான்மையுடையவர்களாக இருந்தோம் என்று நம்மைப் பற்றி கூறுகிறார்: நான் அவர்களின் சபையில் மிகவும் அனுதாபத்தை உணர்ந்தேன். ஆழமான அனுபவத்தின் அடிப்படையில் கூறப்பட்ட விஷயங்கள் மிகவும் ஆழமாக இருந்தன. மேலும், மனிதன் தான் இருக்கும் நாட்டிற்குத் தொண்டாற்ற வேண்டும்.

அண்டை அயலார்களுக்கு இலக்கணம் வகுத்ததோடு சேர்த்து நாற்பது வீடுகள் வரை விரிவாக்குவது என்னைப் பொருத்த வரை பெரிய விஷயமாக இருந்தது. ஏனெனில், இவ்வாறே உண்மையான முறையில் ஒவ்வொருவரையும் கருத்தில் கொள்ள முடியும். கிறிஸ்தவமும் அண்டை அயலார்களுக்கான உரிமைகள் பற்றி போதனை வழங்கியுள்ளதுதான்; ஆனால், அண்டை அயலாரில் யார்? யார்? அடங்குவார்கள் என்பதைக் கூறவில்லை. எனவே தான் பக்கத்து வீட்டுக்காரர்களை மட்டும் அண்டை அயலாராக கணக்கிடப்படுகிறது. ஆனால், இஸ்லாமோ இதைவிட சிறந்த போதனையை முன்வைத்துள்ளது.

இதை ஒரு கிறிஸ்தவர் கூறுகிறார்: ஒரு ஜார்ஜியன் பெண்மணி கூறுகிறார்: நான் இன்று கலீஃபா அவர்களின் இரண்டு சொற்பொழிவுகளையும் கேட்டேன். மிகவும் தாக்கத்திற்கு உள்ளானேன். இன்று எனக்கு இந்த சொற்பொழிவுகள் இந்த விஷயத்தைப் புரிய வைத்தன. அதாவது, மனிதன் தனது சமுதாயத்திற்கும் மனிதகுலத்திற்கும் தொண்டு செய்ய வேண்டும் என்பதே உண்மையான ஒருங்கிணைப்பு என்பதன் பொருள் ஆகும்.

அவர் கூறுகிறார்: எனக்கு ஆண்டு மாநாட்டின் சூழல் பிடித்து விட்டது. ஏனெனில், இங்கு எல்லா விதமான சமுதாய மற்றும்

இனத்தைச் சேர்ந்த மக்கள் மிகவும் அன்போடும், ஒற்றுமையோடும் அமைதியான முறையிலும் ஒன்றுகூடினார்கள். அது வேறு எங்கும் காணக்கிடைப்பதில்லை. லஜ்னாவுக்கான உரையிலிருந்து எனக்கு முதன் முறையாக இஸ்லாத்தில் பெண்களுக்கான அந்தஸ்து இந்த அளவு விசாலமானது என்பது தெரிய வந்தது. போரிலும் கலந்து கொண்ட அப்படிப்பட்ட முஸ்லிம் பெண்மணிகள் வாழ்ந்திருக்கின்றார்கள் என்பது எனக்கு மிகவும் வியப்பூட்டும் விஷயமாக இருந்தது.

அலீபக்கர் ஸாஹிப் எனும் ஒரு விருந்தினர் ஆஸ்திரேலியாவின் கிரீன் முஸ்லிம் பார்ட்டீயின் பிரதிநிதி ஆவார். ஆஸ்ட்டிரிவாயாவாக இருக்கும். இல்லை. ஆஸ்திரேலியாவா? எவ்வாறு இருப்பினும், அவர் கூறுகின்றார்: கலீஃபா அவர்களின் சொற்பொழிவு மனதை ஈர்ப்பதாக தாக்கம் ஏற்படுத்தக் கூடியதாக இருந்தது. அவர்கள் கூறிய விஷயங்கள் முஸ்லிம்களுக்காக மட்டும் அல்ல. அதையும் தாண்டி சமுதாயத்தின் ஒவ்வொரு மட்டத்திற்கும் அவசியமானதாகும். அமைதியை முஸ்லிம் நாடுகளில் மட்டுமின்றி முழுவுலகிலும் நிலைநாட்டுவதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்று கூறியது எனக்கு மிகவும் மனதை ஈர்க்கும் விஷயமாக இருந்தது.

பிறகு, ஒரு ஜெர்மனி பெண் விருந்தினர் மாயீ ஸாஹிபா இவர் முஸ்லிமாக இருக்கவில்லை. அவ்வாறிருந்தும், அங்கு மரியாதைக்காக மேலாடையைத் தலையில் போர்த்தி அமர்ந்திருந்தார். அவர் கூறுகிறார்:

நான் கிறிஸ்தவ பெண் ஆவேன். கலீஃபா அவர்களின் சொற்பொழிவின் போது, நமக்கு ஒருவர் மற்றவருடன் இருக்கும் வித்தியாசம் மிகவும் ஆபத்தானது என்பது தெரிய வந்தது. நாம் ஒன்று சேர்ந்து அமைதி நிறைந்த முறையில் வாழ முடியும். நான் மிகவும் தாக்கத்திற்கு உள்ளானேன். சொற்பொழிவின்போது எனது உள்ளத்தில் அது எந்த அளவு தாக்கம் ஏற்படுத்தியது என்றால் என் கண்கள் குளமாகி விட்டன. அன்னார் பெண்கள் தொடர்பாக எந்தப் போதனைகளை எடுத்துரைத்துள்ளார்களோ அதிலிருந்து கலீஃபா அவர்களின் உரையில் எடுத்துரைக்கப்பட்டது தான் இஸ்லாம் பெண்களுக்கு வழங்கும் உரிமைகள் ஆகும் என்பது வெளிப்படுகிறது. அதையே மற்ற இயக்கங்கள் கூறுகின்றன.

(இங்கு) இந்தப் போதனைகளின்படி அமலும் செய்யப்படுகிறது: வெறும் போதனை மட்டுமல்ல என்பதை நான் சுயமே ஆண்டு மாநாட்டில் பார்த்தேன். அவர் கூறுகிறார்: அன்னார் கூறிய விஷயங்கள் நேராக மனதைத் தொடக்கூடியவையாக இருந்தன. நான் இங்கு, மக்கள் விஷயங்களைக் கேட்டு அழுவதையும் கண்டேன்.

ஜல்ஸாவில் ஏழு நாடுகளைச் சேர்ந்த 39 நபர்கள் பைஅத் செய்வதற்கும் நற்பேறு பெற்றார்கள். அவர்கள் இந்த நாட்களில் தாக்கத்திற்கு உள்ளானார்கள்.

செர்பியாவில் இருந்து வந்திருந்த ஒரு பெண் விருந்தினர் ஓர்திஷ் ஸாஹிபா கூறுகின்றார்: ஜல்ஸா ஸாலான உலகம் முழுவதும் உள்ள அஹ்மதிய்யா உறுப்பினர்களை ஒன்று சேர்க்கக் கூடிய உலகளாவிய நிகழ்ச்சியாகும்.

**எல்லாவற்றையும் விட அதிகம் பைஅத் நிகழ்ச்சி என் மீது ஆன்மிக மற்றும் உணர்வு ரீதியான தாக்கத்தை ஏற்படுத்தியது.முதல் நொடிப் பொழுதில் இருந்து நாங்கள் அனைவரும் ஒருவர் மற்றவரின் தோள்களில் கைகளை வைத்துவிட்டோம். எனக்கு ஒரு சொல் கூட புரியவில்லை. ஆனால், என்ன கூறப்பட்டதோ அது ஏதோ ஒரு வகையில் எனது உடல் மற்றும் மூளை வழியாக சென்றது. ஒரு நடுக்கம் ஏற்பட்டு விட்டது. அது என்னை ஆன்மிக ரீதியாக அல்லாஹ்வுக்கு அருகில் கொண்டு சென்றுவிட்டது. பைஅத்தின் காரணமாக எனக்கு கண்ணீர் வந்துவிட்டது.**

ஒரு துருக்கி இளைஞர் ஜான் மிர்த் ஸாஹிப் ஹம்பர்கில் இருக்கிறார். அவர் கூறுகிறார்: இந்த ஜல்ஸாவில் கலந்து கொண்டு நான் பார்த்தது என்னவென்றால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அஹ்மதிகளின் உள்ளங்களில் இஸ்லாத்தின் வெற்றிக்காக அணையாத ஒரு நெருப்பை மூட்டி விட்டார்கள்.

ஜான் மிர்த் ஸாஹிப் ஜல்ஸாவின் கடைசி நாளன்று எழுத்துப்பூர்வமான பைஅத் செய்த பிறகு எனது கையிலும், பைஅத் செய்தார். இவை அந்த மக்களின் நிலைமைகளாக இருந்தன. சில மக்களுடையதை நான் எடுத்துரைத்தேன்.

அல்லாஹ்வின் அருளால் ஜெர்மனி ஆண்டு மாநாட்டுடைய மீடியா கவரேஜும் மிக நல்ல முறையில் இருந்தது. நான்கு டி.வி சேனல்களில் அதாவது Ard, Rtl, Vdo tv மற்றும் Swr ஆகிய இந்தத் தொலைக்காட்சி சேனல்கள் மூலமாக 41 மில்லியன் மக்கள் வரை ஜமாஅத்தைப் பற்றி ஜல்ஸாவை பற்றி செய்தி சென்றடைந்ததாகக் கூறுகிறார்கள்:

(அடுத்து) பத்திரிகைகள், ஜெர்மனியின் 11 பத்திரிகைகள் பல்வேறு செய்திகளையும் கட்டுரைகளையும் வெளியிட்டார்கள். அதன் மூலமாகவும் 50 மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் வரை ஜமாஅத்தின் தூதுச் செய்தியும் ஜல்ஸாவின் செய்தியும் சென்றடைந்தது.

(அடுத்து) ரேடியோ ஸ்டேஷன்கள்: 5 வானொலி நிலையங்கள் செய்தியை ஒலிபரப்பியுள்ளன. அவற்றின் மூலமாகவும் 14 மில்லியின் மக்கள் வரை தூதுச் செய்தி சென்றடைந்ததாகக் கூறுகிறார்கள்: ஆன்லைன் மீடியா கவரேஜ் மூலமாக 2 மில்லியன் வரை தூதுச் செய்தி சென்றடைந்துள்ளது.

மொத்த எண்ணிக்கை இதன் மூலமாக இவர்களின் கருத்தின்படி 108 மில்லியனுக்கு அதிகமான மக்கள் வரை ஜல்ஸாவின் கவரேஜ் சென்றடைந்தது. எவ்வாறு இருப்பினும், அல்லாஹ் இதற்கான சிறந்த விளைவுகளையும் உருவாக்குவானாக. நான் கூறியதுபோன்று இவை சுருக்கமான தரவுகள் ஆகும். நான் மக்களின் தாக்கங்களை எடுத்துள்ளேன். பல நற்தாக்கங்கள் இருந்தன. அவற்றில் இருந்து சிலவற்றை நான் எடுத்தேன்.

அல்லாஹ் நமது குறைகளைத் திரையிடுகின்றான். (இது) அவன் நம் மீது புரியும் பேரருளாகும். அதற்கு நன்றி செலுத்த வேண்டும். அவ்வாறே பல்வேறு பள்ளிவாசல்கள் திறக்கப்பட்டனவே அவற்றிலும் மக்கள் தங்களுடைய நேர்மறையான தாக்கங்களை எடுத்துரைத்துள்ளார்கள்.

சிலர் எங்களுக்கு அஹ்மதிய்யத் என்றால் எனன்? இஸ்லாத்தின் போதனை என்ன? இஸ்லாம் எவ்வாறு அடியார்களுக்கு செலுத்த வேண்டிய உரிமைகள் மற்றும் அல்லாஹ்வுக்கு செலுத்த வேண்டிய உரிமைகள் ஆகியவற்றின் பக்கம் கவனமூட்டுகின்றது என்று தெரியாமல் இருந்தது என்பதை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

இந்த விஷயங்கள் அனைத்தையும் கேட்டு இன்று பல்வேறு நிகழ்ச்சிகளில் இஸ்லாத்தின் போதனையைப் பற்றி எங்களுக்குத் தெரிய வந்தது. மேலும், எங்கள் கருத்து மாறி விட்டது என்று மக்கள் வெளிப்படுத்தியுள்ளார்கள். எங்களுக்குப் பரிட்சயமான அஹ்மதிகளும் ஒருபோதும் எங்களுக்கு இஸ்லாத்தின் அழகான போதனைகளைத் தெரியப்படுத்தவில்லை என்றும் மக்கள் முறையிட்டுள்ளார்கள்.

எனவே இது தொடர்பாகவும் தப்லீஃக்கிற்கான தாக்கம் ஏற்படுத்தக் கூடிய நிகழ்ச்சியை உருவாக்க வேண்டிய தேவையுள்ளது. ஒவ்வோர் அஹ்மதியும் எவ்வித தாழ்வு மனப்பான்மையும் இன்றி, இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைப் பற்றிய அறிமுகத்தை செய்து வைக்க வேண்டும். உதாரணமாக, ஜல்ஸாவில் ஈரானிய இளைஞர் ஒருவர் வந்திருந்தார். நம் அஹ்மதி ஒருவருடன் அவர் பேசினார். அவரை அவருடைய அஹ்மதி நண்பர் ஒருவர் அழைத்து வந்திருந்தார்.

அவர் கூறினார்: நான் இங்கு வந்து மிகவும் வருத்தமடைந்துள்ளேன். என்ன காரணம்? என்று அவர்கள் கேட்டார்கள். நீங்கள் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி (அலை) அவர்களை நபியாக ஏற்கிறீர்கள் என்பது எனக்கு இன்று இங்கு தெரிய வந்தது. எவ்வாறு இருப்பினும், எவ்வகையிலான நபியாக ஏற்கிறோம் என்று அவருக்கு விபரமாகப் புரிய வைக்கப்பட்டது.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ்(ஸல்) அவர்களின் அடிமைத்துவத்தில் வந்துள்ள

உங்களுக்கு வேலையாட்கள் வேண்டுமா?

உங்களுக்கு டிரைவர், மேஸ்திரி, மெக்கானிக், எலக்ட்ரீசியன் தேவையென்றால் எங்களை தொடர்பு கொள்ளவும்.

நாங்கள் உங்களுக்கு நம்பிக்கையான, நல்ல வேலையாட்களை ஏற்பாடு செய்துகொடுப்போம்.

KHAIRUL-ISLAM
JAYGON-WEST BENGAL 97348 44732




Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com

my grizzly india
my grizzly india
my grizzly india

நபியாக ஏற்கிறோம். அன்னாரது மார்க்கத்தைப் பரப்பக் கூடியவர் மற்றும் அன்னாரது முன்னறிவிப்புகளுக்கு ஏற்ப வந்தவராகப் புரிகிறோம். அன்னார் வரவிருந்த ஈஸா ஆவார்கள்.

அவர் கூறினார்: இது எல்லாம் சரிதான். மஹ்தி, ஈஸா பற்றிய உங்களுடைய கண்ணோட்டம் சரிதான். அறிவுக்கு எட்டுகிறது. ஆனால், என் நண்பர் ஏன் எனக்கு சொல்லவில்லை. பல வருடங்களாக என் நண்பராக இருந்தார்.

ஆக, எவ்வாறு இருப்பினும் எந்தத் தாழ்வு மனப்பான்மையும் இன்றி நம்முடைய நண்பர்களுக்கு பரிட்சயமானவர்களுக்கு நாம் தப்ஃலீக் செய்ய வேண்டும். இது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தக் கூடிய தப்லீஃக் செய்ய வேண்டிய தேவை உள்ளது. தப்லீஃக் துறை Phamplet வவிநியோகம் செய்து விடுவது,Leaf let விநியோகம் செய்து விடுவது, letter box களில் Leaf let ஐப் போட்டு விடுவது ஆகியவை நோக்கத்தை நிறைவேற்றி விடுவதில்லை.

அமைதி பற்றிய விஷயங்களை நாம் பேசி விட்டோம். இப்போது அமைதி எப்படி நிலைபெறும் என்ற அடுத்த விஷயத்தின் தேவையுள்ளது. வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தியை ஏற்பதினால் நிலைபெறும். எனவே அவர்களை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று கூற வேண்டும். தப்லீஃக்கிற்காக ஒவ்வொரு சந்தர்ப்பத்தில் இருந்தும் நாம் பயனடைய வேண்டும்.

இங்கு நான் பார்த்தேன். ஒரு வர்க்கம் எப்படி இருக்கிறது? என்றால், அதில் மக்களுக்கு இப்போதும் மார்க்க விஷயங்களைக் கேட்பதில் ஈடுபாடு உள்ளது. நாம் எப்படிப்பட்ட நிகழ்ச்சியை உருவாக்க வேண்டும் என்றால் அங்கு இத்தகைய மக்களை அழைக்க வேண்டும். அவர்களிடம் உரையாற்ற வேண்டும்.

எவ்வாறு இருப்பினும், நாம் எல்லா இடத்திலும் நம்மை சுய ஆய்வு செய்ய வேண்டிய தேவையுள்ளது. ஜல்ஸாவின் ஏற்பாடுகளில் எங்கெங்கெல்லாம் நிர்வாகக் குறை உள்ளதோ எந்தவொரு நிரந்தரமான துறையானாலும் சரி, அவற்றில் குறிப்பாக கவனம் செலுத்த வேண்டும். ஜல்ஸாவில் ஏற்பாடு மட்டுமல்லாமல் எல்லாத் துறையையும் பார்க்க வேண்டும். அல்லாஹ்வின் அருளால் தப்லீஃக் துறை நன்றாக பணி புரிகிறது. ஆனால், இப்போது அதிகம் மேம்படுத்த வேண்டி உள்ளது.

சிறந்ததிலும் சிறந்தவற்றை நாம் தேட வேண்டும். நன்றாக திட்டம் வகுத்து அல்லாஹ்விடம் உதவி கோரியவாறு துஆ செய்தவாறு உங்கள் பணிகளை செய்யுங்கள். சில மக்கள் சில முறையீடுகளையும் செய்துள்ளார்கள். நான் கூறியதுபோன்று இனி அந்த முறையீடுகளையும் அகற்ற வேண்டும்.

இன்ஷா அல்லாஹ் நிர்வாகமும் கலந்து கொண்டவர்களும் நாம் ஜல்ஸாவின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு முழுமையாக முயற்சி செய்ய வேண்டும் என்று எப்பொழுதும் முயற்சி செய்யுங்கள். ஒரு விருந்தினர் குறிப்பிட்டிருந்தார் என்று நான் கூறியதுபோன்று கலந்து கொண்டவர்கள் ஜல்ஸாவின் நிகழ்ச்சிகளின்போது எழுந்து சென்று வந்தார்கள். அது அவர்களுக்குப் பிடிக்கவில்லை.

ஆக, இந்த விஷயத்தையும் தர்பிய்யத் துறை குறிப்பாக பார்க்க வேண்டும். சிறந்த முறையில் பணிபுரிய வேண்டிய தேவை உள்ளது. அல்லாஹ் நம் மீது கருணை புரிவானாக. இனி அனைவருக்கும் சிறந்த முறையில் ஜல்ஸாவின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக.

தமிழாக்கம்
மல்வலி: அதாவுல் முஃக்னீ

* * * * *

## மல்ஃபூஸாத்... (1ம் பக்க தொடர்ச்சி)

என்றால், அல்லாஹ்விற்குரிய உரிமைகள் மற்றும் அடியார்களுக்குரிய உரிமைகளை தனது அசல் மையப் புள்ளியில் நிலை நிறுத்தி விட்டார்கள். அந்தக் காலத்தின் நிலைமையின் மீது பார்வையை செலுத்தும்போது இறைத் தூதர் (ஸல்) அவர்களின் நல்லொழுக்க ஆற்றலின் சிறப்பு அப்போது மனதில் வந்து விட முடியும். எதிரிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையும், அன்னாரைப் பின்பற்றியவர்களுக்கும் எந்த அளவிற்கு துன்பங்களைக் கொடுத்தனர்! மேலும் அவற்றிற்கு எதிரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முழுமையான வலிமையும், அதிகாரமும் கிடைத்திருந்த அந்த நிலைமையில் அந்த மக்களுடன் எவ்வாறு நடந்து கொண்டார்களோ அது அன்னாருடைய உயரிய மகிமையை வெளிப்படுத்துகின்றது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது உயிரை அர்ப்பணம் செய்திருந்த தொண்டர்களுக்கு அபூஜஹலும் அவனது ஏனைய கூட்டாளிகளும் கொடுத்திராத துன்பம் தான் என்ன இருந்தது? ஏழை முஸ்லிம் பெண்களை ஒட்டகத்தில் கட்டி வைத்து எதிர் திசையில் ஓடச் செய்தனர். மேலும், அவர்கள் பிளக்கப்பட்டனர். لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ என்ற கலிமாவை ஒப்புக் கொண்ட இந்த பாவத்திற்காக மட்டுமே அவர்கள் அவ்வாறு செய்தனர். ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதற்கெதிரில் பொறுமையையும், சகிப்புத்தன்மையையும் மேற்கொண்டார்கள். மேலும், மக்கா வெற்றிக் கொள்ளப்பட்ட போது

لَا تَثْرِيْبَ عَلَيْكُمُ الْيَوْمَ

(இன்றைய நாள் உங்கள் மீது எந்தக் குற்றச்சாட்டும் இல்லை.(12:97)) என்று கூறி மன்னித்து விட்டார்கள். இது எவ்வளவு மகத்தான நல்லொழுக்க சிறப்பு ஆகும்? இது வேறு எந்த நபியிடத்திலும் காணப்படவில்லை.

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ مُحَمَّدٍ

சுருக்கமாக, உயரிய நல்லொழுக்கங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள். ஏனெனில் நன்மைகளின் திறவுகோல் நல்லொழுக்கமே ஆகும்.

(மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 484, காதியான் பதிப்பு, 2018-ம் ஆண்டு பதிப்பு)

* * * * * *

## தஃப்ஸீரே கபீர்... (1ம் பக்க தொடர்ச்சி)

பின்னர் اِلَّا اَنْ تَقُوْلَ اِنْ شَآءَ اللّٰهُ என்ற சொற்கள் இருந்திருக்க வேண்டும். ஆனால், இங்கோ اِلَّا اَنْ يَّشَآءَ اللّٰهُ என்று அல்லாஹ் கூறுகின்றான். அதாவது, அல்லாஹ் இந்த வாக்கியத்தை கூறுவதற்கு கட்டளை வழங்காத வரை நீங்கள் மேலே உள்ள வாக்கியத்தை கூறாதீர்கள். எனவே இந்த வசனத்தின் பொருள் இதுவே ஆகும். அதாவது, அந்த சமுதாயத்தை முஸ்லிம்கள் தமது வலிமையால் எதிர்கொள்ள முடியாது. மாறாக, அல்லாஹ் தனது விருப்பத்திற்கேற்ப அவர்களை எதிர் கொள்வதற்கு எவரை நிறுத்துவானோ அவரால் மட்டுமே அவர்களை எதிர் கொளள் முடியும். அந்த சமுதாயங்களின் முன்னேறங்களைக் கண்டு முஸ்லிம்கள் உத்வேகம் அடைந்து அவர்களை எதிர்க்கும் அந்த நேரத்தின் நிலைமையைக் குறித்து இந்த வசனத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ஆயினும் அவர்கள் அதில் வெற்றியடைய மாட்டார்கள். இரண்டாவதாக, இக்காலத்தின் முஸ்லிம்களின் நிலைமையும் கூறப்பட்டுள்ளது. அதாவது அவர்கள் பணி செய்வதை விட்டு விட்டு நாளை மீதான நம்பிக்கையில் அமர்ந்து விடுவார்கள். மேலும், நாங்கள் நாளை இதனை செய்து காட்டுவோம் என்று எப்போதும் கூறுவார்கள். அதாவது செயலாற்றால் அழிந்துபோய் விடும். மேலும், மிரட்டல்களும், எச்சரிக்கைகளும் மட்டுமே எஞ்சியிருக்கும். மேலும்,எப்போதும் நாளை என்ற சொல்லையே கூறிக் கொண்டிருப்பார்கள். அவர்கள் ஒருபோதும் நடப்பு நாளின் நிலையை மேற்கொள்ள மாட்டார்கள்.எனவே இக்காலத்தில் இந்த உண்மைத்துவம் அனைத்து முஸ்லிம் சமுதாயங்களுடைய செயல்களிலிருந்து இவ்வாறு வெளிப்பட்டுக் கொண்டும் இருக்கின்றது; மேலும் பரிதாபமும் வருகின்றது; ஆச்சரியமும் ஏற்படுகின்றது. நீர் மறந்து விட்டால் உமது இறைவனை நினைவுக் கூர்ந்து என்று கூறி இந்த விஷயம் கூறப்பட்டுள்ளது: அதாவது, ஒருபோதும் ஆவேசம் அடைந்து அந்த சமுதாயத்தை எதிர்ப்பதற்கான எண்ணம் உங்களது உள்ளத்தில் தோன்றக் கூடாது. எனினும், அல்லாஹ்வின் வாக்குறுதிகளை நினைவில் கொள்ளுங்கள். ஒருநாள் முஸ்லிம்களை அவர்களின் தாக்குதல்களிலிருந்து அல்லாஹ் காப்பாற்றுவான். மேலும், மறைமுகமான முஸ்லிம்களின் இரட்சிப்பிற்கான ஏற்பாடு செய்யப்படும் என்பது அவனது வாக்குறுதியாகும். எனவே இறைத் திட்டத்தை தவிர்த்து மற்றத் திட்டங்களுக்கான எண்ணத்தை உள்ளத்திலிருந்து வெளியேற்றி விட வேண்டும். நேர்வழி பெறுவதற்கு இதைவிட மிகவும் சமீபமான ஒரு பாதையில் என் இறைவன் என்னை நடத்திச் செல்வான் என்ற நம்பிக்கை (எனக்கு) உண்டு என்பதில் இந்த படிப்பினையும் உள்ளது. அதாவது, உங்களது பௌதீக திட்டங்கள் நூற்றாண்டுகள் ஆனாலும் அந்த சமுதாயங்களை அழிக்க முடியாது. ஆனால், அல்லாஹ் தனது அருளினால் மிகவும் விரைவாக எப்படிப்பட்ட ஏற்பாடுகளை உருவாக்கி விடுவான் என்றால் நீங்கள் குழப்பங்களிலிருந்து பாதுகாப்பாக இருப்பீர்கள்.

வேதனை என்னவென்றால், முஸ்லிம்கள் இந்த அறிவுரையிலிருந்தும் கூட பயன்பெறவில்லை. மேலும் ஐரோப்பிய சமுதாயங்களுக்கு எதிரில் மீண்டும், மீண்டும் ஜிஹாதிற்கான அறிவிப்புகளை செய்து இஸ்லாத்தின் மதிப்பச்சத்தை அழித்து விட்டனர். இன்னும் கூறப்போனால் இதுபோன்ற விஷயங்களிலிருந்து அவர்களை தடுத்த நலம் விரும்பிகளையெல்லாம் இஸ்லாத்தின் எதிரிகளாக ஆக்கிவிட்டனர். மேலும் திருக்குர்ஆனின் போதனையின் பக்கம் அழைப்பவர்கள் இஸ்லாத்தின் எதிரிகள் கிடையாது; மாறாக, திருக்குர்ஆன் தடை செய்திருக்கும் பட்சத்திலும் மீண்டும் தவறான வழிமுறையை பயன்படுத்திக் கொண்டு சென்று கொண்டிருப்பவர்களே இஸ்லாத்தின் எதிரி என்பதையும் அவர்கள் என்பதை அவர்கள் புரியவில்லை. (தஃப்ஸீரே கபீர், தொகுதி 4, பக்கம் 439, காதியான் பதிப்பு 2010-ம் ஆண்டு)

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly BADAR Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 8 Thursday 12 october 2023 Issue No. 41

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

## அஹ்மதிய்யா ஜமாஅத் நியூஸிலாந்தின் ஜல்ஸா ஸாலானாவையொட்டி ஸய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் வழங்கிய ஆழிய ஞானம் மிக்க தூதுச் செய்தி

அஹ்மதிய்யா ஜமாஅத் நியூஸிலாந்தின் அன்பிற்குரிய சகோதரர்களே!

அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹி வ பரக்காதஹு

2023-ம் ஆண்டு ஜனவரி 20,21 ஆகிய தேதிகளில் உங்களது ஜல்ஸா ஸாலானாவை நடத்துவதற்கான நற்பேறு உங்களுக்கு கிடைத்துக் கொண்டிருப்பதை அறிந்து எனக்கு எல்லையற்ற மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது. அல்லாஹ் உங்களது ஜல்ஸாவை மிகவும் அருளுக்குரியதாகவும், வெற்றிக்கரமானதாகவும் ஆக்குவானாக. மேலும், ஜல்ஸாவில் கலந்து கொள்ளும் அனைவரும் எல்லையற்ற ஆன்மிக பயன்களையும், அருட்களையும் பெறக்கூடியவர்களாக இருக்கட்டுமாக!

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஜல்ஸா ஸாலானாவின் நோக்கங்களைக் குறித்து விளக்கியுள்ளார்கள். அந்த நோக்கங்கள் சில இவ்வாறாகும். அதாவது, அன்னாரை ஏற்றுக் கொள்ளக்கூடியவர்கள் இறையச்சம், நன்மை மற்றும் தூய்மையை மேற்கொள்ள வேண்டும்; அவர்களிடம் இறைவன் மீதான அச்சம் உருவாக வேண்டும்; ஒருவர் மற்றவரின் மீதான அன்பும் நேசமும் அவர்களின் உள்ளங்களில் அதிகரித்துக் கொண்டே செல்ல வேண்டும். மேலும், இறைவனின் அனைத்து படைப்பினங்களுடன் அவர்கள் அனுதாபத்துடன் நடந்து கொள்ளக் கூடியவர்களாக இருக்க வேண்டும். நீங்கள் பணிவை மேற்கொள்ள வேண்டும்; மேலும் இஸ்லாத்தின் உண்மையான மற்றும் அமைதி நிறைந்த தூதுச் செய்தியை நீங்கள் எந்தெந்த நாடுகளில் எல்லாம் வசிக்கின்றார்களோ அங்கு பரப்ப வேண்டும் என்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தம்மை ஏற்றுக் கொண்டவர்களுக்கு கூடுதலாக இந்த வழிகாட்டலையும் வழங்கியுள்ளார்கள்.

ஆக, அன்னார் (அலை) இது தொடர்பாக கூறுகின்றார்கள்:

இந்த ஜல்ஸாவை சாதாரண மனித ஜல்ஸாக்களைப் போன்று கருதாதீர்கள். இறைவன் தனது கரத்தால் இந்த அமைப்பின் அடித்தளத்தை வைத்துள்ளான். மேலும், இதற்காக சமுதாயங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன. அவை விரைவில் இதில் வந்து சேர்ந்து கொள்ளும். ஏனெனில், இது எந்த வல்லமை படைத்த இறைவனுக்கு முன்னால் அசாத்தியமான விஷயம் எதுவும் இல்லையோ அந்த இறைவனின் பணியாகும். (இஷ்திஹார், டிசம்பர் 27, 1892, மஜ்மூஆயே இஷ்திஹாராத், தொகுதி1, பக்கம் 341 -342)

நம்மை படைத்தவனாகிய அல்லாஹ்வுடன் உங்களுக்கு தனிப்பட்ட நேசம் மிக்க தொடர்பு ஏற்படுவதற்கு நீங்கள் முயற்சி செய்ய வேண்டும். நீங்கள் ஐவேளை தொழுகைகளை முறையாகவும், ஜமாஅத்துடனும் நிறைவேற்றக் கூடியவர்களாக இருக்க வேண்டும். நீங்கள் மனித குலத்திற்கான உரிமைகளை செலுத்துவதும் உங்களுக்கு இன்னும் அவசியமாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

அவனது அடியார்கள் மீது கருணை காட்டுங்கள். மேலும், அவர்கள் மீது நாவினாலோ அல்லது கைகளினாலோ அல்லது ஏதாவது திட்டத்தினாலோ அநீதியிழைக்காதீர்கள். மேலும் படைப்பினங்களின் நன்மைக்காக முயற்சி செய்து கொண்டிருங்கள். மேலும், எவர் மீதும் ஆணவம் கொள்ளாதீர்கள். ஒருவர் உங்களுக்கு கீழ் பணிபுரிபவராக இருந்தாலும் சரி; மேலும் ஒருவர் ஏசிபேசினாலும் (நீங்கள்) எவரையும் ஏசி பேசாதீர்கள்.

நீங்கள் ஒப்புக் கொள்ளப்படுவதற்காக ஏழையாகவும், மென்மையானவராகவும், நல்லெண்ணம் கொண்டவராகவும், படைப்பினங்களின் மீது அனுதாபம் கொண்டவராகவும் ஆகிவிடுங்கள். (கிஷ்தி நூஹ், ரூஹானீ கஸாயீன் 19, பக்கம் 11 -12)

பைஅத்தின் அடிப்படையில் உங்களது பொறுப்புகளை நிறைவேற்றக் கூடியவர்களாக நீங்கள் இருக்க வேண்டும் என்பதற்காக நீங்கள் முயற்சி செய்ய வேண்டும். மேலும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது ஜமாஅத்தில் இணைந்த மக்களிடம் எந்த ஆன்மிக தரத்தை எதிர்பார்த்துள்ளார்களோ அந்த தரம் வரை உங்களது ஆன்மிகத்தின் தரத்தை கொண்டு செல்ல வேண்டும்.எனவே நீங்கள் உங்களது தனிப்பட்ட நடத்தையையும், வழிமுறைகளையும் தொடர்ந்து ஆய்வு செய்து கொண்டே இருந்து வரும் வரையிலும், ஒரு முன்னுதாரணமான அஹ்மதியாக ஆகுவதற்கு முயற்சி செய்யும் வரையிலும் தான் ஜல்ஸாவில் கலந்து கொள்வதற்கான நோக்கத்தை பெற முடியும்.

அல்லாஹ்வின் புறமிருந்து நிறுவப்பட்டுள்ள கிலாஃபத் அமைப்பின் முக்கியத்துவம் தொடர்பாகவும் நான் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகின்றேன். அந்த கிலாஃபத் அமைப்பின் விளைவாகவே நாம் அல்லாஹ்வின் எண்ணற்ற அருட்களை கண்டு கொண்டிருக்கின்றோம். உங்களுக்கு கலீஃபத்துல் மஸீஹுடன் வலிமையான தொடர்பு இருப்பதற்கு நீங்கள் முயற்சி செய்ய வேண்டும். மேலும், எல்லா நிலையிலும் உண்மையையும், நன்றியுணர்வையும் வெளிப்படுத்துங்கள்.

இஸ்லாத்தின் எதிர்காலமும், உலகில் அமைதி நிலைபெறுதலும் அஹ்மதிய்யா ஜமாஅத்தை மட்டுமே சார்ந்துள்ளது என்பதை நினைவிற் கொள்ளுங்கள். இது தொடர்பாகவும் நான் அறிவுரை செய்கின்றேன். அதிகம் அதிகமாக MTA பாருங்கள். மேலும் அதிலிருந்து பயனடையுங்கள். குறிப்பாக எனது ஜுமுஆ குத்பாக்களையும், பல்வேறு சந்தர்ப்பங்களில் நான் ஆற்றும் எனது சொற்பொழிவுகளையும் கேளுங்கள். மேலும் அவற்றை தொடர்ந்து கேட்டு வாருங்கள்.

தப்லீஃக் தொடர்பான உங்களது பொறுப்புகளையும் ஒருபோதும் மறந்து விடாதீர்கள். அது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஒவ்வோர் உறுப்பினருக்கும் முக்கியத்தும் வாய்ந்தது ஆகும். எனவே நுட்பமான ஞானத்துடன் இஸ்லாம் அஹ்மதிய்யத்தின் அழகிய தூதுச் செய்தியை தாக்கம் மிகு வடிவில் முழு நியூஸிலாந்திலும் பரப்புவதற்கான திட்டங்களை தீட்டுங்கள்.

அல்லாஹ் உங்களின் ஜல்ஸாவை மிகவும் அருளுக்குரியதாகம், வெற்றிகரமானதாகவும் ஆக்குவானாக. மேலும், இறையச்சத்திலும், ஆன்மிகத்திலும் முன்னேறுவதற்கு உங்கள் அனைவருக்கும் நற்பேறு வழங்குவானாக. அல்லாஹ்வுடன் மேலும் கூடுதல் நெருக்கம் மிகு தொடர்பை உருவாக்குபவர்களாக நீங்கள் திகழ்வீர்களாக.

மேலும், உங்களிடத்தில் உண்மையான மாறுதல்களை உருவாக்குவதற்கு அவன் உங்களுக்கு நற்பேறு வழங்குவானாக. அப்போதுதான் நீங்கள் நன்மையிலும், இறையச்சத்திலும் மேலும் இஸ்லாத்திற்கும் மனிதத்துவத்திற்கும் சேவை செய்வதிலும் முன்னேற்றம் அடையக் கூடியவர்களாக திகழ முடியும். அல்லாஹ் உங்கள் மீது தனது அருளை செய்வானாக. ஜஸாக்குமுல்லாஹ் அஹ்ஸனல் ஜஸா

(நன்றி: அல்ஃபஸ்ல் பத்திரிகை இன்டர்நேஷனல், ஏப்ரல் 11, 2023)

* * * * * * * * *

**National Watch Company**
**Sales & Service**

**B. Mohamed Adil**
93632 06679
99433 38000
**196, Trichy Road, Sulur - 641 402.**
**Somanur, Anuparpalayam, Karumathampatti.**

O.A. NIJAM 99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT 99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
**5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,**
**{ opp. Karuna Clinic } Tirunelveli-627005**

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad